# ஈழத் தமிழர் நிலைபற்றி ஆராயப்போகிறது

# ஐ. நா. குழு!


# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 60 தொலை பேசி: 23411 நிறுவியது 1947.

வள்ளுவர் ஆண்டு 2007 | புரட்டாதி24, | ஷவ்வால்15 | (10-10-76)ஞாயிறு | புத்தகம்30 | இதழ்49


## லண்டன் கார்டியன் தகவல்!

இலங்கையுட்பட ஆறு நாடுகளில் அடிப்படை மனித உரிமைகள் வேண்டுமென்றே மீறப்பட்டு வருவது பற்றியும், பாரபட்சங்களைத் தவிர்ப்பது, சிறுபான்மை இனங்களை பாதுகாப்பது ஆகியவை பற்றியும் ஐ. நா. மனித உரிமைக் குழு இரகசியமாகக் கூடி ஆராய்வது என்று ஜெனிவாவில் நடைபெற்ற அதன் வருடாந்த மாநாட்டில் முடிவுசெய்துள்ளதாக லண்டனிலிருந்து வெளிவரும் 'கார்டியன்' ஏடு அண்மையில் ஒரு செய்தி வெளியிட்டுள்ளது, கார்டியனின் ஜெனிவா நிருபர் Rod Chapman (ரொட் சாப்மன்) என்பவர் 14-8-76 இதழில் இத்தகவலைத் தந்திருக்கிறார்.

உகண்டா, சிலி, மாலாவி சிறீலங்கா, பொலிவியா, ஈகுவடோரியல் கயானா, ஆகியநாடுகளில் மனித உரிமைகள் மீறப்படுவதுபற்றி இரகசியமாக ஆராயவிருக்கும் மனித உரிமைக் குழு, பாரபட்சங்களை அகற்றுவது பற்றியும் சிறுபான்மை இனங்களை பாதுகாப்பது பற்றியும் ஆலோசிக்கவிருப்பதாக அச்செய்திகூறுகிறது.

மேலும் அச்செய்தியில் கூறப்பட்டிருப்பது:-

"உகண்டா ஜனாதிபதி இடி அமினும், ஈகுவடோரியல்

—5-ம் பக்கம்பார்க்க

● தர்காநகரில்

## சிங்கள - முஸ்லிம் கலவரமா?

### வேலை நிறுத்தத்தின் பின்னணியென்ன?

அளுத்கம இ. போ. ச. பஸ் ஊழியர்களின் வேலை நிறுத்தத்தின் பின்னணியென்ன? இந்த வேலை நிறுத்தத்தின் அடிப்படை நோக்கம் இனத்துவேஷமா? பேருவளையை அடுத்துள்ள தர்கா நகரில் முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையே ஏற்பட்ட மோதலின் விளைவாகத்தான் இந்த வேலை நிறுத்தம் ஏற்பட்டதா? இவ்வாறான கேள்விகள் பொதுமக்களின் மனத்தைக் குழப்பி வருகின்றன.

அளுத்கம இ. போ. ச. டிப்போவைச் சேர்ந்த பஸ் ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்வதும், அதற்கு அனுதாபமும் ஆதரவும் தெரிவித்து இன்னும் பல்வேறு இ. போ. ச. டிப்போக்களைச் சேர்ந்த 8000 ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்ததும் தெரிந்ததே.

இதற்கு அடிப்படைக்காரணம் அளுத்கமையிலுள்ள முஸ்லிம் மக்கள் வாழும் தர்கா நகரில் ஏற்பட்ட ஒரு அசம்பாவித சம்பவமே

—5-ம் பக்கம் பார்க்க

# சிறிமாவோவின் முகமூடி கிழித்தெறியப்பட்டது!

ஈழத்தமிழ் தேசிய இனத்தை அடக்கியொடுக்கி ஆதிக்கம் செலுத்திக்கொண்டும், தமிழ் ஈழத்தின் சுயாதீனத்தையும் சுயநிர்ணய உரிமையையும் மறுத்துக்கொண்டும்—அதே வேளையில் உலக விடுதலை இயக்கங்களுக்காகவும் தென்னாபிரிக்க இன வெறியை எதிர்த்தும் இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா ஆடிவரும் போலி நாடகத்தை ஐ. நா. பிரதிநிதிகளுக்கும் நோர்வே அரசாங்க பிரமுகர்களுக்கும், இலண்டனில் இயங்கும் ஈழத்தமிழர் விடுதலை இயக்கமான ஈழத்தமிழர் கழகம் அம்பலப்படுத்தியுள்ளது, ஐ. நா. சபைக் கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதிநிதிகளுக்கும் பிரபல அமெரிக்க பத்திரிகைகளுக்கும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நியூயார்க்கிலிருந்த சமயம் இப்பிரசுரத்தை ஈழத்தமிழர் கழகம் அனுப்பிவைத்தது.


அப் பிரசுரத்தில்கூறப்பட்டிருப்பதாவது:—

"கூட்டுச்சேரா நாடுகளின் தலைவியென்ற முறையில் இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோபண்டாரநாயகா உங்களுக்கு உரை நிகழ்த்த விருக்கிறார். அண்மையில்

—5-ம் பக்கம் பார்க்க

## விடுதலைக்கூட்டணி நடவடிக்கைக் குழு!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக் குழுக் கூட்டம் இன்று (10-10-76) ஞாயிற்றுக்கிழமை காலை கிளிநொச்சியில் திரு. வீ. ஆனந்தசங்கரி பா. உ.வின் இல்லத்தில் நடைபெறுகிறது.




● டிசம்பரில் பேரவை கலைப்பு?

## மார்ச்சுக்கு முன்

# பொதுத்தேர்தல்!

எதிர்வரும் டிசெம்பரில் தேசிய அரசுப்பேரவை கலைக்கப்படலாமென்றும், அடுத்தபொதுத்தேர்தல் 1977 மார்ச் திங்களுக்குள் நடைபெறக்கூடுமென்றும் அரசாங்கத்துடன் நெருங்கிய வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது. அனேகமாக பிரதமர் நாடு திரும்பியதும் இதுபற்றிய அறிவிப்பு வெளிவரக் கூடுமென்றும் ஊகிக்கப்படுகிறது.

தேசிய அரசுப்பேரவையைக் கலைத்துவிட்டுபொதுத் தேர்தலுக்கு செல்ல இதுவே தக்க தருணம் என்றும் இப்போது தேர்தலை நடத்தினால் மீண்டும் தாமே பதவிக்கு வரக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாகவும் அரசாங்கத்திலுள்ளவர்களில் பெரும்பாலோர் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறார்களாம்!

நவம்பரில் தாக்கல் செய்யப்படவிருக்கும் பட்ஜட் முழுக்கமுழுக்க ஒரு தேர்தல் பட்ஜட்டாகவேயிருக்குமென்றும் அதில் மக்களுக்குப் பல சலுகைகள் இருக்கலாமென்றும் அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

அநேகமாக அடுத்த பொதுத் தேர்தல் 1977

—8-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# இரத்தப் புற்றுநோயைத் தீர்க்கும் அதிசய மூலிகை!

### வியட்நாம் டாக்டர்களின் கண்டுபிடிப்பு!

உயிர்க்கொல்லிநோயான இரத்தப்புற்று நோயை தமிழ் நாட்டில் கிடைக்கும் மூலிகை செடி அடியோடு குணப்படுத்துகிறது என்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. வியட்னும் நாட்டில் இந்தச் செடியைப் பயன்படுத்தி பதினைந்தே நாளில் ஒரு வாலிபரை டாக்டர்கள் குணப்படுத்தியுள்ளனர்.

இந்த அதிசய மூலிகையைத்தேடி காடுகளுக்கோ, மலைப் பகுதிகளுக்கோ போகத் தேவையில்லை. நமது கிராமப் புறங்களில் கிடைக்கும் 'பீநாறிச் செடி' என அழைக்கப்படும் ஒருவகைச் செடியே இரத்த புற்றுநோய் தீர்க்கும் மூலிகையாகும்—இந்தச் செடியின் பெயர் 'நித்திய கல்யாணி' என்பதாகும். தமிழ் நாட்டில் நெல்லை, ராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில் வரண்ட பகுதிகளில் தரிசுக் காடுகளில் இது பெருமளவு காணப்படுகிறது.

வெள்ளை நிறமாகவும், ஊதா சிவப்பு கலந்த 'பிங்க்' நிறமாகவும் பூக்கும் இரு வகை செடிகள் இதில் உள்ளன. இந்தச் செடி மிக உயர்ந்த மூலிகைச் செடி என்று இப்போது சர்வதேச அளவில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.


ஆங்கில மருத்துவத்தில் இன்னும் சரியான மருந்து கண்டுபிடிக்கப்படாத ஆட்கொல்லி நோயான ரத்தப் புற்றுநோயை பீநாறி செடியின் இலைகள் குணப்படுத்துவதாக வியட்னும் நாட்டைச் சேர்ந்த டாக்டர்கள் நிரூபித்துள்ளனர்.

இரத்த அழுத்தம்போன்ற நோய்களை குணப்படுத்துவதுடன், இரத்தப் புற்று நோயையும் இது அற்புதமானவகையில் குணப்படுத்துகிறது என்பது கண்டிபிடிக்கப்பட்டுள்ளது. இரத்தப் புற்றுநோய் கண்ட ஒரு வாலிபருக்கு இந்தச் செடியின் சாற்றை கொடுத்ததில் நான்கு நாட்களில் அவர் உடலில் உள்ள சிவப்பு அணுக்கள் அதிகரித்து வெள்ளை அணுக்கள் குறைந்தன என்பதை டாக்டர்கள் கண்டார்கள்.

"15 நாட்களில் அந்த வாலிபர் முழுக் குணமடைந்து வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டார்" என்று வியட்னும் செய்தி நிறுவனம் தகவல் தெரிவித்துள்ளது.

இந்த மூலிகை தமிழ் நாட்டில் ஏராளமாகக் கிடைப்பதால், வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்து பெருமளவு அந்நிய செலாவாணி சம்பாதிக்க நல்ல வாய்ப்பு உள்ளது.

அரளி, சர்ப்பகாந்தி, ஆகிய செடி இனங்களைச் சேர்ந்தது 'நித்திய கல்யாணி' என்பது குறிப்பிடத்தக்கது.



## அரங்கேற்றம்

இலங்கைத்தொழிலாளர் கழகப்பொதுச்செயலாளரும் த. வி. கூ. பிரமுகரும் பிரபல சட்டத்தரணியுமான திரு. மு. பரராசசிங்கம் அவர்களின் புதல்வி செல்வி. துஷியந்தியின் பரதநாட்டிய அரங்கேற்றம் அண்மையில் கண்டியில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். முதலாவது படத்தில் செல்வி துஷியந்தியின் பரதநாட்டியத்தில் ஒரு பாவத்தையும்—இரண்டாவது படத்தில் செல்வி துஷியந்திக்கு மூதறிஞர் தந்தைசெல்வா பாராட்டுப் பத்திரம் வழங்குவதையும் காணலாம்.

# ஞானப்பீடப் பரிசு பெற்ற அகிலனுக்கு ஈழத்தமிழ் எழுத்தாளர்கள் பாராட்டு!

பிரபல தமிழ் எழுத்தாளர் திரு. அகிலனுக்கு 1975ம் ஆண்டுக்கான அகில இந்திய ஞானபீட இலக்கிய விருது கிடைத்ததையொட்டி ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் சார்பில் ஈழத் தமிழ் எழுத்தாளர் பேரவை தனது பாராட்டையும் வாழ்த்துக்களையும் தெரிவித்திருக்கிறது. திரு. அகிலனுக்கு ஞானபீடப் பரிசாக ரூபா ஒரு இலட்சமும், சான்றிதழ் ஒன்றும் இந்தியத் தாயின் உருவச்சிலையொன்றும் வழங்கப்படவிருக்கிறது.

திரு. அகிலனுக்கு மேற்படி பரிசு கிடைத்ததைப் பாராட்டி ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவை விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ் எழுத்தாளர் அகிலன் அவர்களுக்கு 1975ம் ஆண்டுக்கான ஞான பீடப் பரிசு கிடைத்திருப்பதையிட்டு ஈழத் தமிழ் எழுத்தாளர் பேரவை மகிழ்ச்சியடைகின்றது. அகிலன் அவர்களுக்கு எமது பேரவை தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.

காந்திய நெறிகளைக் கடைப்பிடித்து தமிழர் பண்பாட்டுடன் மக்களின் மனதைப் பண்படுத்தவும் வாழ்வை வளப்படுத்துவதற்கும் எழுதி வருபவர் அகிலன் அவர்கள்.

பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காகவோ மக்கள் "விரும்புகிருர்கள்" என்பதற்காகவோ, மக்கள் விரும்புகிருர்கள் என்று சொல்லிக் கொண்டோ அல்லது அதிகாரத்திலுள்ளவர்களுக்கு திருப்தி ஏற்படும் என்பதற்காகவோ தனது கருத்தையோ எழுத்தையோ வளைத்து எழுதாமல் தனது மனச்சாட்சியின்படிநேர்மையாக எழுதி வருபவர் திரு. அகிலன். அவருக்கு இந்தப் பரிசு கிடைத்திருப்பது மிகவும் தகுதியானது.

அவருக்குக் கிடைத்திருக்கும் இந்தப் பரிசு தமிழுக்கு, தமிழ் எழுத்தாளர்களுக்கு கிடைத்திருக்கும் மதிப்பு ஆகும்.

அகிலன் அவர்கள் மேலும் பல பரிசுகளும் விருதுகளும் பெற்றுப் பெருமை பெற வாழ்த்துகிருேம்.

# 'வீரத்தின் விளைநிலம் உடலா? உள்ளமா? வாணி விழாவில் சுவையான விவாதம்!

## சிறையில் வாடும் தமிழ் இளைஞர்கள் மேற்கோள்!

'வீரத்தின் விளைநிலம் உடலா? உள்ளமா? — என்ற சுவையான விவாதமொன்று திருக்கோணமலை சிவயோக சமாஜம் நடாத்திய வாணி விழாவில் கடந்த 1-10-76ல் இடம்பெற்றது. புலவர் பொன். சிவசேகரனுர் தலைமையில் நடந்த மேற்படி விவாத அரங்கில் உள்ளம் தான் வீரத்தின் விளை நிலம் என்பது தீர்ப்பாயிற்று. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தொண்டன் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் மேற்கோளாக காட்டப்பட்டார். இவரின் பாடலொன்று அங்கு படித்துக் காட்டப் பட்டது.'

உள்ளம்தான் வீரத்தின் விளை நிலம் என செல்வன் உதயசங்கரும் செல்வன் சந்திரகாந்தன் விவாதிக்க... இதற்கு எதிர்மாருக உடல் தான வீரத்தின் விளை நிலம் என ஆசிரியர் திரு. கனக தாமோதரன் அவர்களும் செல்வன் ஆனந்த பிரசாத்தும் விவாதித்தார்கள். சுவையாக. பல நூறு மக்களுக்கு மத்தியில் நடந்த இவ் விவாதத்தின் ஒரு கட்டத்தில், உள்ளம்தான் வீரத்தின் விளைநிலம் என் விவாதித்த செல்வன் உதயசங்கர் தனது பேச்சிற்கு மேற்கோளாக கவிஞர் காசி ஆனந்தனைச் சுட்டிப்பேசினுர். 'பொங்கு வெறியர் சிறைதனில் எனைப பூட்டிவதைத்தாலும்...? —என்ற காசியின் பாடலும் அங்கு படித்துக்காட்டப்பட்டது. இவர் மேலும் பேசுகையில்,—

"இன்று தமது பூரண உரிமைக்காகப்போராடிவரும் தமிழ் இளைஞர்களில் பலர் சிறையில் பூட்டப்பட்டு சித்திரவதை செய்யப்படுகிருர்கள். இவர்கள் அனைவரும் தமது உடல் பலத்தை மூலதனமாக வைத்துத்தான் உரிமைக்காகப் போராடுகிருர்கள் என்பது சுத்தப் பேத்தலாகும். அஞ்சாத நெஞ்சத்தினராய் ஆட்சியாளர்களை எதிர்த்துப் போராடும் இவர்கள் துஞ்சாத கண்களும், தூங்காத உடலும், எதையும் தாங்க வல்ல திடசித்தமான உள்ளத்துடனும இன்று தமிழீழ விடுதலைக்காகப் போராடி வருகிருர்கள். இவர்களில் முதன்மையானவர் காசி ஆனந்தன் முற்ருகத் தம்மை விடுதலைப்போருக்கு அர்ப்பணித்துவிட்ட இவருக்கு உடல்பலம் மிகக்குறைவு. ஆனுல், 'எதையும் சாதித்து விட முடியும்' என்ற அசையாத உள்ளமும, ஆன்மீக பலமுமே இவரைப் பூரணமாக வழி நடத்திச்செல்கின்றன. ஆட்சியாளர்களே இவரைக் கண்டு அஞ்சுகிருர்கள் என்ருல் அதற்கு மூல காரணம் இவரின் அசையாத உள்ளததிலெழுந்த ஆணித்தரமான பிடிவாதம்தான்" —என்று கூறினுர். இவரின் இந்தப் பேச்சு பலத்த ஆதரவுடன் அங்கு வரவேற்கப் பட்டது. எதிர்த்தரப்பில் பேசிய ஆசிரியர் திரு. கனக தாமோதரனின் பேச்சு மிகவும் சூடு நிரம்பியதாகவும், ரசிக்கக்கூடிய முறையிலும் இருந்தது. ஆனந்த பிரசாத் அழகாகப் பேசினுலும் 'பாலர் பாடத்தை' உவமை காட்டிப்பேசியது அவ்வளவு நன்ருக இல்லை.

செறிந்த, ஆக்க அறிவு நிரம்பியவர்களுக்கு மத்தியில் இவர் பேசிய 'ஆத்தி சூடி' 'கொன்றைவேந்தன்' —போன்றவை அவ்வளவாக வரவேற்பைப்பெறவில்லை. இவ்விவாத அரங்கிற்குத் தலைமை வகித்த புலவர் பொன். சிவசேகரனுர் தமது கடமையைச் சரிவரச்செய்ய வில்லையென்று பார்வையாளர்கள் பலரால் குறை கூறப்பட்டார். திட்டமாகத் தனது முடிவை இதுதான் என்று கூருமல் தீர்ப்பைச் சிரித்துச் சிறிது சமாளித்து விட்டார்.

"ஆன்மீக பலமே சிறந்தது. ஆன்மீக பலத்தின் துணையின்றி எதையும் சாதித்து விடமுடியாது"— என்று மொட்டையாகச் சொல்லி மெதுவாக மாறி விட்டார். "அரசியல் கலவாத எதுவும் இருக்கமுடியாது— என்பதற்கு வாணி விழாவில் செல்வன் உதய சங்கரின் பேச்சு ஒரு சிறந்த சான்ருகும். அரிசியிலிருந்து ஆண்டவன்வரை அரசியலைப் பூச நினைக்கும் இன்றைய நவயுக இளைஞர்கள் பாராட்டுதலுக்குரியவரே. அரசியலல்லாதது எதுவுமில்லை! — என்ற அடிப்படைத் தத்துவத்தை அரணுக வைத்து எங்கும்... எதிலும் அரசியல் முழக்கம் ஆரவாரித்து எழவேண்டும் அப்படியாருல்தான் எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் கால எல்லை குறைந்து நாம் குறுகிய காலத்தில் ஒரு திட்டமான பயனைப்பெற முடியும்."

—என வாணி விழாவில் வைத்து பல அபிமானிகள் தமது கருத்தைப் பரிமாறிக் கொண்டனர்.


சுதந்திரன் புதிய
விற்பனையாளர்கள்

கல்பிட்டி
ஜனுப். எஸ். ஏ. எம்.
பதுறுதின்
சந்தை
சின்னக்குடியிருப்பு,
கல்பிட்டி.

கண்டி
திரு. எம். கந்தையா
110, மத்திய சந்தை,
கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றரை ஆண்டுகள் சிறையிருக்கும் சத்தியசீலனைப் பற்றி 'லண்டன் ரைம்ஸ்' எழுதுகிறது..!



"Prisoners of Conscience" (மனச்சாட்சியின சிறைக் கைதிகள்) என்ற பகுதியில் Sri Lanka — Mr. Ponnuthurai Sathiyaseelan (இலங்கை: பொன்னுத்துரை சததியசீலன) என்ற தலைப்பிட்டு, இலண்டனிலிருந்து வெளிவரும் 'டைம்ஸ்' ஏட்டின் 29-9-76 இதழில் டேவிட் வாட்ஸ் (David watts) என்பவர் பின்வருமாறு எழுதியுள்ளார்:-

சிறீலங்காவின் அவசர காலப் பிரமாணங்களின் கீழ் திரு. பொன்னுத்துரை சத்தியசீலன் மூன்றரை ஆண்டு காலத்துக்கு அதிகமாக விசாரணையின்றி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். சிறீலங்கா பல்கலைக்கழகப் பட்டதாரியான அவர், தமது திருமணத்தையடுத்து, 1973ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ம் திகதி கைது செய்யப்பட்டார்.

இடதுசாரி தீவிரவாத இளைஞர்களின் புரட்சியின் காரணமாக 1971ம் ஆண்டு அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது என்றாலும் — அதன் பிரமாணங்கள், சுயாட்சியும் தனிநாடும் கேட்கும் தமிழர்களுட்பட ஏனைய அரசியல் கைதிகளுக்கு எதிராகவும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

29வயதே நிறைந்த திரு. சத்தியசீலன், தமிழ் மாணவர் பேரவையின் ஓர் உறுப்பினர். பல்கலைக்கழகக் கல்விக்கு தகுதி படைத்த ஏராளமான தமிழ் மாணவர்களை அதலபாதாளத்தில் தள்ளி வீழ்த்திய 'தரப்படுத்தல்' எனும் அரசாங்கக் கொள்கையை எதிர்த்து தீவிரமான போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர் திரு. சத்தியசீலன்.

1972ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசியல் சட்டம், சிங்களத்தை மட்டும் அரசகரும மொழியாக்கியதனாலும், பௌத்த மதத்துக்கு அரசியல் சட்டத்தில் "முதலிடம்" கொடுத்ததனாலும், தமக்குப் பாரபட்சமிழைக்கப்பட்டிருப்பதாக இந்துக்களை பெரும்பான்மையினராகக் கொண்ட தமிழ் மக்கள் கருதுகிறார்கள்.

1974ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 'தனிநாடு போராட்டத்தின் மீது கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர்களை விடுதலை செய்ய இலங்கை அரசு முன்வந்தபோதிலும், திட்டவட்டமான குற்றச்சாட்டுக்களிருப்பதாகக் கூறி திரு. சத்திய சீலனையும் மற்றும் நால்வரையும நீதியமைச்சு விடுதலை செய்ய மறுத்துவிட்டது.


அண்மையில் கூட்டுச்சேரா நாடுகளின் மாநாடு கொழும்பில் நடைபெற்றபோது— விசாரணையின்றி சிறைவைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை விசாரணைக்கு கொண்டு வரவேண்டும் அல்லது விடுதலைசெய்யவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து சத்திய சீலனும் மற்றும் 22 இளைஞர்களும் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கப்போவதாக அறிவித்தார்கள். இதை அறிந்த அரசாங்கம் 13 இளைஞர்களை விடுதலைசெய்தது.

ஆகஸ்ட் 5ம் திகதி தமது உண்ணாவிரதத்தை தொடங்

—6-ம் பக்கம் பார்க்க

# 'உலகத்தமிழனே ஒன்றுபடு! ஈழத்தமிழருக்கு குரல்கொடு

## லண்டன் அண்ணா விழாவில் டாக்டர் சனார்த்தனம் முழக்கம்!



ஈழத் தமிழர் கழகத்தின் சார்பில் லண்டன் விம்பில்டன் மால்பரோ ஹாலில் 25-9-76 அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது திரு. சுந்தரலிங்கம் அவர்கள் தலைமை வகித்தார்.

விழாவில் 'அப்சர்வர்' நாளேட்டின் முன்னாள் ஆசிரியர் திரு. டேவிட் ஃஆஸ்டர். திரு. ரெவரண்ட் மைக்கேல் ஸ்காட், திரு. குமரகுரு, ஆகியோர் பேசினர்.

சிறப்புரை ஆற்றிய உலகத் தமிழ் இளைஞர்பேரவைத் தலைவர் டாக்டர். இரா. சனார்த்தனம் பேசும்போது, அண்ணாவின் சிறப்புக்களையும், அவர் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எடுத்த முயற்சிகளையும் விளக்கி 'உலகத் தமிழனே ஒன்றுபடு ஈழத்தமிழருக்குக் குரல்கொடு' என்றார்.

விழாவின் அண்ணாவின் சொற்பொழிவுகளும், அண்ணாவைப் பற்றிய பாடல்களும் ஒலிபரப்பப்பட்டன. 'தமிழன் குரல்' விழாவிற்காக சிறப்பிதழ் வெளியிட்டது.

# பண்டிதமணிக்கு 'கலாநிதி' பட்டம்!



தமிழ் பேரறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்குக் கலாநிதி என்னும் கௌரவப் பட்டத்தை வழங்கிக் கௌரவிக்க இலங்கைப் பல்கலைக்கழக ஆளுநர் சபை தீர்மானித்துள்ளது.

கந்த புராணத்தின் கருவூலமான தக்ஷ காண்டத்துக்கு பண்டிதமணி அவர்கள் எழுதிய உரையை இலங்கைப் பல்கலைக் கழகப் பேராதனை வளாக இந்து மாணவர் சங்கம் 1967ல் வெளியிட்ட போது பண்டிதமணி அவர்களைப் பேராதனைக்கு அழைத்துப் பெருஞ் சிறப்புச் செய்தது. குறித்த தக்ஷ காண்டத்துக்குப் பண்டிதமணி அவர்கள் எழுதிய அரிய உரையைப் பாராட்டிய இலங்கை சாகித்திய மண்டலம் 1968ல் ஆயிரம் ரூபா பரிசில் வழங்கியதுடன் சாகித்திய மண்டலத்தின் உயர் உறுப்பினர் என்ற விருதினையும் பண்டிதமணி அவர்களுக்கு வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத்தில் நடைபெற்ற மாபெரும் விழாவில் வழங்கியது.

நாவலர் வழி வந்த பெரும் தமிழறிஞரான பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் இலக்கியம், மொழி சமயம் ஆகிய துறைகளுக்கு சென்ற அரை நூற்றாண்டுக்கு மேலாகச் செய்த சேவையினை இலங்கைப் பல்கலைக் கழகம் பாராட்டி கலாநிதி என்ற கௌரவப் பட்டத்தை இப்பொழுது வழங்கிக் கௌரவிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஏனடி பெண்ணே!

தமிழீழ மாதருக்கு
தனித் துணிவொன்று வேண்டும்
அமிழ் தான தமிழின் மீது
அசையாத பக்தி வேண்டும்!

கனிவான இதயந் தன்னைக்
கடுமையாய் ஆக்கிக் கொண்டு
துணிவான செயல்கள் வேண்டும்
தொடர்ந்து போர் நடாத்த வேண்டும்!
பணிவாக இருந்த நம்மைப்
பம்பரம் போன்று ஆக்கிப்
பிடிவாத மாக ஆட்சி
பிழிதலைப் பார்த்திரா மோ

சிறையிலே அண்ணன் காசி,
சித்திரவதை செய்கின்றார்
மறைவிலே இன்னும் எங்கள்
மைந்தரும் வாடுகின்றார்! (எங்கள்)
"சிறி"க்கொரு நீதி இங்கு
சிரி சேனைக் கொன்று நீதி
நெறிக் கொரு நீதி — சீனு
வெறிக் கொரு வேறு நீதி.

எத்தனை நீதி அம்மா
என்னரும் தமிழ்த்தாயம்மா
பித்தரோ நாங்களிங்கு
பிதற்றிடும் மக்களா மோ?
சத்துருவாக்கி எம்மைச்
சமர்க்களத் தழைக்கின்றார்கள்
சத்தியம் செய்வோம் — நாளை
சரித்திரம் படைப்போம் தாயே!

வீரத்தின் விளைநிலமாம் கோணர் மண்ணில்
வீணர்களின் முயற்சியென்றும் பலித்திடாது!
தீரத்தின் பிறப்பிடமாய் இருக்கும் இங்கே
தீந்தமிழர் தியாகிகளாய்ப பிறப்பார் கண்டீர்.
கூழுக்கு மாரடிக்கும் சிகப்புக்கட்சி
கொடுஞ் செயல்கள் புரிந்துவரும் நீலக்கட்சி
நாளைக்கு வரப்போகும் பச்சைக் கட்சி
நம் தமிழர் மத்தியிலே நெருப்புக் குச்சி!

எத்தனை கட்சி இங்கே
எடுத்தடி வைத்த போதும்
சுத்தமாய் நமது கட்சி
சுதந்திரம் முழங்கி நிற்கும்

கூட்டணிக் கொடியின் கீழே
கொள்கையை விளக்கி நிற்போம்
பாட்டிலே பயனைக் கொள்வோம்
பைந்தமிழ் வளர்த்து நிற்போம்

மாதரே எழுவீர் — தந்தை
மலரடி தொழுவீர் — எங்கும்
சாதனை புரிவீர் — இங்கே
சமர்க்களம் விரைவீரா மே

சோதனை வந்த போது
சொர்க்கமாய் நினைக்க வேண்டும்
வேதனை உற்ற போது
விழுப்புண்ணாய் மதிக்க வேண்டும்.
போதனை பெற்று எங்கள்
புனிதப்போர் தொடங்க வேண்டும்!
வாதினில் வாகை சூடி
வண்டமிழ் காக்கவேண்டும்
ஏனடி பெண்ணே — இன்னும்
உறக்கமா எழடி இங்கே
தேனடி தமிழர் ஈழம்
தெய்வீக வெற்றி காண்பாய்

—பிலோமினா லோரன்ஸ்
[திருக்கோணமலை]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எண்ணம்

# தமிழ் ஈழப் பிரச்சினையை உலகம் உணர்கிறது!

## காந்தி தினத்தில் கூட்டணி இயக்கம்!

காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் 2ம் திகதி தமிழர் விடுதலைக்கூட்டணி ஆரம்பித்திருக்கும் 'சிங்கள மக்களுக்கு கடிதம் அனுப்பும் இயக்கம்' அனைவராலும் வரவேற்கக்கூடியதொன்ருகும். இந்த இயக்கத்தை ஒரு பிரசார இயக்கமாகவும், அதே நேரத்தில் ஒரு சட்டமறுப்பு இயக்கமாகவும் நடத்துவதாக தமிழர் விடுதலைக்கூட்டணி அறிவித்திருக்கிறது.

தமிழ் மக்கள் என்ன நினைக்கிருர்கள் —என்ன கோருகிருர்கள்—சிங்கள மக்களை அவர்கள் எப்படிக் கருதுகிருர்கள் என்பதெல்லாம் சிங்கள மக்களுக்கு சரியாகத் தெரிவதற்கு வாய்ப்புக்கள் எதுவும் இன்று கிடையாது: தமிழர்கள் இந்தியாவுடன் சேர்ந்து கொண்டு, சிங்கள இனத்தை விழுங்கி ஏப்பமிடுவதற்கு சதித்திட்டம் தீட்டி வருவதாக அதிகார வெறி பிடித்த சிங்கள அரசியல் வாதிகளும், சிங்கள பௌத்த வெறியர்களும், பௌத்த பிக்குகளும் சிங்கள மக்கள் மத்தியில் வேண்டுமென்றே பொய்ப் பிரசாரம் செய்து தமிழ் மக்களைப் பற்றிய தப்பெண்ணத்தை மிகவும் ஆழமாக விதைத்துவிட்டிருக்கிருர்கள்.

இலங்கை முழுவதுமே சிங்களவருக்குச் சொந்தம் என்றும், தமிழர்கள் இங்கு வந்தேறு குடிகள் என்றும் வரலாற்றுக்கு முரண்பட்டு — சிங்கள மக்கள் மத்தியில் வேண்டுமென்றே தமிழர்கள் மீது காழ்ப்புணர்ச்சியும், கசப்புணர்ச்சியும் இன்று வளர்த்துவிடப்பட்டுள்ளது.

தமிழ்பேசும் மக்கள் சிங்கள மொழிக்கோ சிங்கள இனத்துக்கோ என்றைக்கும் எதிரிகள் அல்லர் என்பதும் —சிங்கள இனத்தை நசுக்குவதோ, அழிப்பதோ, அவர்களைத் தங்கள் ஆளுகைக்குட்படுத்துவதோ தமிழர்களின் நோக்கமாக இருந்ததுமில்லை; இருக்கப் போவதுமில்லையென்பதை சிங்கள மக்களுக்கு நாம் மிகவும் தெளிவாக எடுத்துக் கூறிவிடவேண்டிய நிலையிலிருக்கிருேம்!

தமிழ் மக்கள் சுதந்திர புருஷர்களாகத் தம்மைத் தாமே தமது பிரதேசத்தில் ஆட்சி செய்துகொண்டு—சிங்கள மக்களுக்கு எதுவித தொல்லையுமின்றி அவர்களுடன் என்றென்றும் சிநேகபூர்வமாக வாழ விரும்புகிருர்களேயன்றி எவருடனும் சேர்ந்து சிங்கள இனத்தை அழிப்பதோ அதன் தனித்துவத்தை கெடுப்பதோ தமிழர்களின் நோக்கமல்ல என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும்!

இன்னும் சொல்லப்போனுல்—தமிழ் மக்கள் தனியே பிரிந்து தமிழ் ஈழத்தில் தங்கள் சுயஆட்சியை நிறுவினுல் மட்டுமே—சிங்களவர்கள் தங்கள் ஆசைப்படி தமது சிங்கள நாட்டை ஒரு தனிச்சிங்கள பௌத்த நாடாக ஆக்கிக்கொள்ளவும், தங்கள் தனித்துவத்தைப்பேணவும் முடியும்.

எனவேதான், 1833ஆண்டு ஆங்கிலேயன் போட்ட அரசியல் பிணைப்பு அறுக்கப்பட்டு, தமிழ் ஈழமும், சிங்கள நாடும் மீண்டும் தனித் தனியே இயங்கத் தொடங்குவது, இலங்கையின் இரண்டுதேசிய இனங்களுக்கும் நன்மை பயக்கக்கூடியது என்று கூட்டணி கருதுகிறது.

தமிழர்கள் யாருக்கும் அடிமையாயிராமல் — யாராலும் ஆளப்படாமல்—அதே சமயம் யாருக்கும் எசமானுக இல்லாமல் —யாரையும் சுரண்டாமல் — யாராலும் சுரண்டப்படாமல் — சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தன்னைத்தானே ஆளவேண்டும் என்ற ஒப்பற்ற உயர்ந்த கொள்கையின் அடிப்படையில் தான் தமிழர் விடுதலைக்கூட்டணி இன்று இயங்கி வருகிறது.

இந்த உண்மைகளை சிங்கள மக்களிடையே எடுத்துச் சொல்வதற்கும், அவர்களது தப்பபிப்பிராயங்களை போக்குவதற்கும் காந்தி பிறந்த நாளன்று தொடங்கப்பட்ட கூட்டணியின் சட்டமறுப்பு — பிரசார இயக்கம் ஓரளவு உதவும் என்று நம்புகிருேம்! சிங்கள மக்களுக்குப் புரிவதற்காக சிங்கள மொழிபெயர்ப்புடன் இக்கடிதங்களை கூட்டணித் தொண்டர்கள் அனுப்பி வருகிருர்கள்!

இதனுல் பெரும்பாலான சிங்களவர்கள் மனமாற்றமடைந்து கூட்டணியின் கோரிக்கைக்கு ஆதரவும் அனுதாபமும் தெரிவிப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்காவிட்டாலும்—நியாய புத்தியும், மனிதாபிமானமுள்ள சிலரது மனச்சாட்சியையாவது — இக்கடிதங்கள் தட்டியெழுப்பும் என்பதையும் நாம் மறுப்பதற்கில்லை!

'நீயும் வாழு, மற்றவனையும் வாழவிடு' என்ற உன்னதமான உயர்ந்த தத்துவத்துடனேயே தமிழ் மக்களின் தேசிய விடுதலை இயக்கம் இயங்கிவருகிறது என்ற உண்மையை எவ்வித ஐயத்துக்குமிடமின்றி எடுத்துரைப்பதில் கூட்டணி இயக்கம் வெற்றிபெற வாழ்த்துகிருேம்.

---

கடந்த நாலு ஐந்து ஆண்டு காலமாகவே, யாழ்ப்பாணப் பொது அலுவலர்கள் குழு, யாழ்ப்பாணப் பெற்ருர் சங்கம், கொழும்பு ஆய்வுக் கழகம், மொழிவழித் தொழிற்சங்கங்கள் இன்னும் லண்டனில் இயங்கும் ஈழத்தமிழர் கழகம் ஈழ விடுதலை முன்னணி போன்ற இயக்கங்கள் திசெம்பர் 10 ஆம் திகதியில் பிரதி ஆண்டிலும் "மனித உரிமைகள் தினத்தை"ச் சம்பிரதாய பூர்வமாக அனுட்டிக்க ஆரம்பித்தது தெரிந்ததே! இயக்க ஏடுகள் அத்தினத்தில் சிறப்பு மலர்கள் வெளியிட்டன.

அதற்கு முன் சர்வதேச நீதிச் சபையினருக்கு மூதறிஞர் தந்தை செல்வா அவர்களும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தி தொண்டமான் அவர்களும், இன்னும் தமிழ்க் கல்விமான்களும் தனிப்பட்டவர்களும், சபையின் அழைப்பின் பேரில் இலங்கையில் இடம்பெறும் மனித உரிமைகள் மீதான மீறுதல்கள் பற்றிய தத்தமது அறிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தார்கள்.

அதன் காரணமாக சர்வதேச மனித உரிமைகள் குழுவும், சர்வதேச மன்னிப்புச் சபையினரும், தமிழ் ஈழப் பிரச்சினையிலும் அதற்கான தமிழ்ஈழ விடுதலைப்போராட்டம் குறித்தும் சிரத்தை எடுக்க ஆரம்பித்தன.

சர்வதேச மன்னிப்புச் சபை எடுத்த சிரமம் காரணமாக தமிழ்ஈழ விடுதலையை நேசித்த ஒரே காரணத்துக்காக நீதி விசாரணைகூட இல்லாது தமிழ்ஈழத் தேசியவாதிகள் பலர் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதும் அவர்களுள் பலர் சித்திரவதைக்கு ஆளானதும் உலகப் பிரசித்தமாகிவிட்டது. நோபல் பரிசு பெற்ற ரஷ்ய எழுத்தாளர் தமது சொந்த நாட்டில் சிறையில் அடைக்கப்பட்டது எவ்வளவுக்கு அனைத்துலகக் கவனத்தைக் கவர்ந்ததோ அதற்குச் சற்றும் குறையாத பிரசித்தம் சிறையில் வாடும் தமிழ் ஈழத் தேசியக் கவி காசி ஆனந்தனுக்கும் சக இளைஞர்களுக்கும் கிடைத்தது. வண்ணை ஆனந்தனை 1975ம் ஆண்டில் அவ்வருடத்துக்கான கைதியென்று சர்வதேச மன்னிப்புச்சபை அறிவித்திருந்ததோடு, தமது சஞ்சிகையின் முகப்புப் பக்கத்திலும் அவரது ஒளிப்படத்தை வெளியிட்டு அனைத்துலகிலுமுள்ள தமது உறுப்பினர்களை அவரை விடுதலை செய்யுமாறு இலங்கைப் பிரதம அமைச்சருக்குக் கடிதங்களை அனுப்புமாறும் கேட்டுக்கொண்டது.

சென்ற வாரம் தெரிந்தெடுத்த தொண்டர்கள் எவ்வாறு இலங்கை பூராவுமுள்ள ஆயிரக்கணககான சிங்களப் பிரமுகர்களுக்கு தமிழ்ஈழக் கோரிக்கையை வலியுறுத்தி கடிதங்களைக் கையெழுத்திட்டு முகவரி தெரிவித்து அனுப்பிவைத்தார்களோ அதேபோன்று, சர்வதேச மன்னிப்புச்சபை உறுப்பினர்களும் அப்போது உலக நாடுகள் பலவற்றில் இருந்தும் வண்ணை ஆனந்தனது விடுதலையை வற்புறுத்தி சுமார் 15,000 கடிதங்களை அனுப்பிவைத்ததாக அறிவிக்கப்பட்டது. சர்வதேச மன்னிப்புச் சபையின் மேற்போந்த சமரச நடவடிக்கைகளுக்கும் சிங்கள சோஷலிச இனவாத ஆட்சி இணங்கி வராத காரணத்தாலேயே அணிசேரா நாடுகளது மாநாட்டின்போது சிறையிருக்கும் செல்வங்கள் சாகும் வரைக்குமான தமது உண்ணுவிரதத்தை ஆரம்பித்தார்கள்.

மேற்படி உண்ணுவிரதத்தின்போது தேகநிலை மோசமடைய உண்ணு நோன்பின் இரண்டாது நாளிலேயே நீர் கொழும்பு சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஜீவ மரணப் போராட்டத்துக்கு ஆளாக்கப்பட உரும்பிராய் பொன்னுத்துரை சத்தியசீலனைப் பற்றிய வரலாற்றுக் குறிப்பு ஒன்று "மனச்சாட்சியின் கைதிகள்" என்ற தலைப்பில் 27-9-76 லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் வெளிவந்துள்ளது.

மேலும் மனித உரிமைகளை வேண்டுமென்றே மீறி வரும் ஒரு நாடாக ஐ. நா. மனித உரிமைகள் குழு இலங்கையின் பெயரையும் வெளிப்படுத்தியிருப்பதாக 14-8-76ம் திகதிய காடியன் பத்திரிகையில் அதன் செய்தி நிருபர் ஜெருட்சப்மன் அறிவித்துள்ளார். பாரபட்ச நடவடிக்கைகளைத் தடுப்பது மற்றும் சிறுபான்மைப் பாதுகாப்பின் மீதான ஐ. நா. உப குழு, தனது விசாரணையை அங்கு தற்பொழுது நடைபெற்றுவரும் வருடாந்தக் கூட்டத்தில் இரகசியமாக மேற்கொள்ளுமென்றும் மேற்படி செய்தி தெரிவிக்கிறது.

அண்மையில் இலங்கையில் நடைபெற்ற அணிசேரா நாடுகளது மாநாட்டைத் தொடர்ந்து மேற்படி அணிக்குத் தலைமை ஏற்றிருக்கின்ற காரணத்தால் மேபாலும் — ஐ. நா. மனித உரிமைகள் நிபந்தனைகளில் இலங்கையும் கைச்சாத்திட வேண்டுமென்று நீதி அமைச்சின் செயலாளர் அறிக்கை சமர்ப்பித்திருப்பதாக இலங்கை வார வெளியீடான "ஹணி"யில் ஒரு செய்தி பிரசுரமாகியுள்ளது. மேற்படி நிபந்தனைகளில் கைச்சாத்திடும் பட்சத்தில் மனித உரிமைகள் பற்றிய மீறுதல்கள் குறித்து முறைப்பாடு தெரிவிக்கும் உரிமை பிரஜைகளுக்குக் கிடைப்பதோடு, ஐ. நா. மனித உரிமைகள் குழு முறைப்பாடுகளை விசாரணை செய்ய அனுப்பும் பேராளர்களை மறுப்புரையாது ஏற்றுக் கொள்ள அரசு கடப்பாடுடையதாகும்.

ஆகவே, இதுவரை காலமும் இலங்கைத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஏட்டுச் சுரைக்காயாக இருந்த மனித உரிமைகளை நிஜமாகவே அனுபவிக்கும் வாய்ப்புக்கள் அவர்களுக்கு அதிகரித்து வருகின்றன. இவற்றிற்கு சர்வதேச மன்னிப்புச் சபைக்கும், மனித உரிமைகள்குழுவிற்கும்நன்றி பாராட்டுவதோடு மனித உரிமைகள் பற்றி சகலரும் தெளிவாக அறிந்து பயனடைய அவற்றைப் பிரச்சாரம் செய்ய திசெம்பர் 10ல் எதிர்வரும் "மனித உரிமைகள் தினத்தை" நன்கு பயன்படுத்துவோமாக!

—திரவியம்

---

## கண்ணிலும் கருத்திலும் நிறைந்த கலைமகள் விழா!

கொழும்பு அரசினர் ஆயுள்வேத மருத்துவப்பீட தமிழ்ச் சங்கத்தினர் 2-10-76 சனிக்கிழமை மாலை கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் எடுத்த கலைமகள் விழா இயல், இசை, கூத்து எனும் முப்பெரும் அம்சமும் இடம்பெற்று, கலா ரசிகர்களின் பாராட்டைத் தட்டிக்கொண்டுவிட்டது. விழாவுக்கு ந. சத்திய மூர்த்தி தலைமை தாங்கிஞர். மருத்துவ கலாநிதி வீ. சண்முகநாதனின் உணர்ச்சியுரையும், ஈழவேந்தனின் ஆய்வுரையும் சுவையும் பயனும் உள்ளதாக அமைந்திருந்தது. வைத்திய கலாநிதி ஷேக்ஸ்பியர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

எட்வேட் ராஜநாயகம் குழுவினரின் கம்பன் கண்ட தமிழ் விழா' கதாகாலட்சேபம் 1974ம் ஆண்டு நடைபெற்ற உலகத் தமிழ் பாராட்டு நிகழ்ச்சிகளையும், அதை முறியடிக்க நடந்த துரோகங்களையும் உணர்ச்சிபூர்வமாக சித்தரித்ததுடன்; தமிழன் மீண்டும் தமிழ்நாடு அமைத்தே தீருவான் என்ற முடிவையும் தந்து கலா ரசிகர்களின் பாராட்டைப்பெற்றுக்கொண்டது.

ஈழத்தின் நாட்டியப் பேரொளியாகத் திகழும் செல்வி விஜயாம்பிகை இராமசாமியின் நடன விருந்து கலாரசிகர்களது உள்ளங்களை மகிழ்ச்சிக் கடலில்மூழ்கவைத்தது; அவரது மயில் நடனம் கண்டு பாராட்டாதார் எவருமே யில்லை.

கல்லூரி மாணவர்களின் 'உலகம் சுற்றுகிறது' நாடகம், சிறந்த நகைச்சுவை விருந்ததாக இருந்தது. இத்தகைய கலை நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்து ஒத்துழைத்த ஆயுள்வேத மருத்துவபீடத் தமிழ் சங்கத்தினர் பாராட்டுக்குரியவர்கள்.

---

## காந்தி தினத்தில் முடிவு!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளை, தமிழ் மகளிர் பேரவையின் கொழும்புக் கிளை தமிழ் இளைஞர்களின் கொழும்புக்கிளை ஆகிய மூன்று அமைப்புக்களினதும் கூட்டுக்கூட்டமொன்று கொழும்பில் காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2ம் திகதி நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேற்படி மூனறு கிளைகளும் கொழும்பில் வீடுவீடாகச்சென்று உறுப்பினர்களைத் திரட்டுவதென்றும், இயக்க ஏடுகளையும் நூல்களையும் விற்பனை செய்வதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் பௌத்த சிங்கள ஆக்கிரமிப்புக்கு முயற்சி!

பௌத்தர்கள் அல்லாதோரே பெரும்பான்மையாக வாழுகின்ற மன்னார் பிரதேசத்தை முழுக்க முழுக்க பௌத்த சிங்கள ஆதிக்கத்திற்குட்படுத்த மன்னாரில் அண்மையில் பொறுப்பேற்றுள்ள இரு அரசாங்க உயர் அதிகாரிகள் தீவிர நடவடிக்கைகள் எடுத்து வருவதாக அறிய வருகிறது.

இவர்களில் ஒருவர் தலைமன்னா வீதியில அமைந்திருக்கும் சிங்கள பாடசாலை பெற்றோர் ஆசிரியா சங்கத் தலைவராக இருக்கின்றாராம். இவர் அப் பாடசாலையை மன்னார் பட்டினசபைக்குச் சொந்தமான சிறுவர் பூங்கா இருக்கும் இடத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தும் வருகிறாராம. இதற்காக இரண்டுமாடிக் கட்டிடமொன்றைக் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளதாம். இது நடைபெற்ற பின்னர் தலைமன்னார் வீதியில் உள்ள பௌத்த சிங்கள பாடசாலை பௌத்த யாத்திரிகர் தங்கும் மடமாக மாற்றப்படுட என்று கூறப்படுகின்றது.

## கொண்டச்சி

முந்திரிகைச் செய்கை அபிவிருத்தி என்ற போர்வையில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிமகள் கிராமமாகிய கொண்டச்சி என்ற கிராமத்தில் அரசாங்க வீட்டமைப்புத் திட்டத்தின்மூலம 600 சிங்களக் குடும்பங்களை குடியேற்ற முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாம். இத்திட்டத்தின் முதற் கட்டமாக அறுபது வீடுகள் கட்டி பூர்த்தியடையும் நிலையில் உள்ளதாம். இப்பகுதியில் வாழும் ஏழை முஸ்லிம்கள் பலர் தகுந்த வீடுவசதிகள் இல்லாமல் கஸ்டப்படும் நிலையில் சிங்கள மக்களுக்கு இவ்வீடுகளை தாரைவார்த்துக்கொடுக்க திட்டமிடப்பட்டுள்ள தாம்.

## செம்மண்தீவு

செம்மண் தீவு கிராம சபைக்குச் சொநதமானதாகவுள்ள திறந்த வெளியரங்கும் அதைச்சேர்ந்த 8 ஏக்கர் காணியும் பௌத்த நிலையம் ஒன்று கட்டுவதற்குப் பயன்படுத்தப்படவுள்ளதாம். ஏற்கனவே இந்த மைதானத்திற்குப் பக்கத்தில் ஒரு பௌத்த கோவில் ஒன்று கட்டும் முயற்சியில் ஒரு பௌத்த பிக்கு ஈடுபட்டதால் அதற்கு அருகில் இருந்த இந்துக் கோவிலைச் சேர்ந்தவர்களுடன் பிரச்சனையேற்பட்டு அப்பௌத்த கோவில் அகற்றப்பட்டது அறிந்ததே.

இத்தகைய ஆக்கிரமிப்பு முயற்சிகளுக்கு இங்கு உள்ள இரு சிங்கள உயர் அதிகாரிகளே தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இவர்களின் இந்த முயற்சிக்கு மன்னார் மாவட்ட அரசியல் அதிகாரத்தின் ஆதரவும் ஒத்துழைப்பும் இருந்து வருவதாகவும் சொல்லப்படுகிறது.

# இளைஞர்கள் விடுதலை

தற்போது குற்றக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் மாவை சோ. சேனாதிராசாவின் தம்பி சோ. தங்கராசா மீதும், செ. செல்வநாயகம் என்ற மற்றோர் இளைஞர் மீதும் 1974ம் ஆண்டு காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் சுப்ரீண்டெண்ட் காரியாலயச் சுவர்களிலும், மற்றும் பொது இடங்களிலும் அரசுக்கு எதிராக் சுலோகங்கள் எழுதியதாக குற்றம் சுமத்தி அரசு தொடரவிருந்த வழக்கு சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் கைவிடப்பட்டதையடுத்து இவர்கள் இருவரையும் மல்லாகம் நீதவான் திரு. எம். டி. யேசுரத்தினம் விடுதலை செய்தார். இந்த இரு இளைஞர்களும் ஏற்கனவே 286 நாட்கள் இது சம்பந்தமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# மத்திய வங்கிக்கு புதிய தமிழ் தட்டச்சுப்பொறி!

மத்தியவங்கி தமிழ் ஊழியர் சங்கம் தொடர்ந்து எடுத்த முயற்சியின் விளைவாக வங்கியாளர் பயிற்சி நிறுவனம் ஒரு தமிழ் தட்டெழுத்தாளரை நியமித்ததோடு, ரூபா 4100 பெறுமதியான புதிய ரெமிங்டன் தட்டச்சுப் பொறியையும் கொள்வனவு செய்துள்ளது. இனிமேல் தமிழ் பொதுமக்கள் எதுவித தயக்கமுமின்றி இந்நிறுவனத்துடன் வைக்கும் தொடர்புகள் அனைத்தையும் தமிழில் வைக்கலாம். மத்தியவங்கி தமிழ் ஊழியர் சங்கம் ஈட்டிய வெற்றிகளில் இதுவும் ஒன்றென்பது குறிப்பிடத்தக்கது.

# த. வி. கூ. கிளை தீர்மானம்

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும், பட்டிருப்பு தொகுதியிலுள்ள ஒவ்வோர் கிராமங்களிலும் கூட்டணியின் கொள்கை விளக்கக் கருத்தரங்குகளை நடத்தவும், இதில் தமிழ் இளைஞர் பேரவைக்குமுக்கியபங்குகொடுக்கவும், பட்டிருப்புதொகுதி த. வி. கூ. கிளை தீர்மானித்துள்ளது.

அத்துடன், "தமிழர் விடுதலைக்கூட்டணியைச்சேர்ந்த தேசிய பேரவை உறுப்பினர்கள் கூட்டங்களுக்கு வருவதாக வாக்களித்து, அவர்களை நம்பி கூட்டங்களை ஒழுங்குசெய்த பின்னர், நேரத்தில் வராமல் விடுவதனால், கூட்டணி உறுப்பினர்களும், பொதுமக்களும் ஏமாற்றமடையும் நிலையை உணர்ந்து, இத்தகைய தவறுகள் நேராதவாறு பார்த்துக்கொள்ளும்படி கூட்டணி பா. உ. க்களை கேட்டுக் கொள்ளும்" தீர்மானத்தையும் பட்டிருப்புத் தொகுதி த.வி. கூ. கிளை எடுத்துள்ளது.

## மட்டு நகரில் தமிழ் இளைஞர் பேரவை புனரமைப்பு

மட்டக்களப்பு இளைஞர் பேரவையினரின் கலந்துரையாடல் ஒன்று மாமரங்கம் பிள்ளையார் ஆலய முன்றலில் 3-10-76 ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இக் கலந்துரையாடலில் தமழ் இளைஞர் பேரவையின் இடைக்கால அமைப்பாளர் திரு. ஆ. இரகுபதிபாலஸ்ரீதரனும், பருத்தித்துறை இளைஞர் பேரவை அமைப்பாளர் திரு. கனக—மனோகரனும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். அதைத் தொடர்ந்து மட்டக்களப்பு இளைஞர் பேரவை புனரமைப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர் தெரிவும்நடைபெற்றது. மட்டக்களப்புத் தொகுதி இளைஞர் பேரவையின் முழு நேர அமைப்பாளராக திரு. கா. அன்ரனும் அவருக்கு உதவியாக திரு. செல்வேந்திரனும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்கள்

## ஏறாவூர் ப. நோ. கூ. சங்கத்தில் கலைமகள் பூசைக்கு அனுமதி மறுப்பு

மேற்படி கூட்டுறவுச் சங்கத்தில் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட தமிழ் ஊழியர்கள் வேலை செய்கிறார்கள். கடந்த காலங்களிலும் அவர்கள் இச் சங்கத்தில் கலைமகள் பூசை செய்து வந்துள்ளனர். இம்முறை சங்கத் தலைவர் அனுமதி மறுத்துவிட்டாராம். இதற்குரிய காரணம் என்னவென்று புரியவில்லை.

இவர் மேடைகளில் இன, மத ஒற்றுமை வாயளவில் மட்டும் பேசுபவர் என்பதும், ஓர் அரசாங்க ஆதரவாளர் என்பதும், கடந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் போட்டியிட்டு நாலாவது இடத்துக்குத் தூக்கி எறியப்பட்டு, மண் கவ்வியவர் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. சமத்துவம், சகோதரத்துவம் எனப் பீற்றித்திரியும் அரசின் ஆதரவாளர் இப்படியும் செய்யலாமா எனப் பலர் கேட்கின்றனர்.

—ஏறாவூர்ப்பரம்.

## சிறிமாவோவின்...

—1-ம் பக்கத் தொடர்

திருமதி பண்டாரநாயகா தலைமையில் கொழும்பில் நடந்துமுடிந்த கூட்டுச்சேரா நாடுகளின் மாநாடு ஏகாதிபத்தியம், இனவாதம், காலனித்துவம் ஆகியவற்றை மிகக் கடுமையான வார்த்தைகளால் கண்டித்ததுடன் உலகில் சுதந்திரத்துக்காக போராடும் அமுக்கப்படுகின்ற — அடக்கியொடுககப்படுகின்ற மக்களின விடுதலைப் போராட்டங்களுக்கு தனது பூரண ஆதரவையும் தெரிவித்திருந்தது. இந்த இனிய செய்தியை திருமதி பண்டாரநாயகா உங்களுக்குத் தெரிவிக்க இங்கு வந்திருக்கிறார்.

உயர் சாதியைச் சேர்ந்த பௌத்த சிங்கள பிரபுத்துவக் குடும்பத்தில் பிறந்த இலங்கையின் பிரதமரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா தனது நாட்டில் தமிழ் சிறுபான்மையினரை அடக்கியொடுக்கி, தங்கள் பிறந்தநாட்டிலேயே இரண்டாந்தர நிலைக்கு அவர்களை ஆக்கிவைத்திருக்கிறார்!

கொழும்பில் கூட்டுச்சேரா மாநாடு கூடியபோது இலங்கையில் பெரும் அரசியல் கொந்தளிப்பு பூண்டிருந்தது. ஆனால் தமிழர்களின் விடுதலைப் போராட்டச் செய்திகள், மாநாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகளுக்கு அணுவளவும் தெரிந்துவிடாமல் அரசாங்க சார்புள்ள புதினப் பத்திரிகைகளால் பூரணமாக இருட்டடிப்பு செய்யப்பட்டன. மாநாட்டில் கலந்து கொண்ட ஏனையநாடுகளுக்கு இந்தச் செய்திகள் பரவினால், தனது சர்வதேசியப் பெருமையும் புகழும் மறைந்துவிடுமென்ற அச்சத்தில் இவற்றை மறைப்பதில் இலங்கைப் பிரதமர் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

இலங்கையில் வாழும் தமிழர்களின் மொழி உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன; அரசாங்க சேவையில் அவர்களுக்கு வாய்ப்புக்கள் மறுக்கப்படுகின்றன; தமிழினத்தை சிங்களமயமாக்கும் திட்டத்துடன், தமிழ் மக்களின் பாரம்பரிய நாடான தமிழ் ஈழ நிலப்பரப்பில் அரசாங்க ஆதரவுடன் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நடைபெறுகிறது; தமிழ் மாணவர்களுக்கு திறமையிருந்தும் பல்கலைக்கழகக் கல்வி மறுக்கப்படுகிறது; அரசாங்கத்தின் ஆதரவுடன், தமிழ் மக்கள்மீது இராணுவமும் பொலிசும் வெறித தாக்குதல் நடத்துகின்றன; கைத்தொழிலில் ஈடுபட விரும்பும் தமிழருக்கு அரசாங்கத்தினால் உதவிகள் மறுக்கப்படுகின்றன. தமிழ்ப்பகுதி பொருளாதார அபிவிருத்தி வேலைகள் புறக்கணிக்கப்படுவதுடன், தனியார் இதில் ஈடுபடுவதும் தடுக்கப்படுகிறது!

தமிழ் தேசியவாதிகள் தங்கள் உரிமைகளுக்காக எந்த வழியில் போராடினாலும், அது அதி தீவிரவாதம்என்று வர்ணிக்கப்பட்டு பிரதமரின் நேரடி கண்காணிப்பின்கீழ் இயங்கும் இராணுவத்தினால் நசுக்கப்படுகிறது. அண்மையில் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த தமிழ் இளைஞர்களுக்கு மிருகத்தனமான முறையில் பலாத்காரமாக 'கட்டாய உணவூட்டலை" அரசாங்க டாக்டர்கள் மேற்கொண்டிருந்தார்கள்.

இலங்கைத் தமிழர்களுக்கு தங்கள் தனித்தமிழ் ஈழத்தை மீண்டும் புனரமைப்பது தவிர வேறு வழி ஏதுமில்லை. தமிழ் இளைஞர்கள் தமிழ் ஈழத்தை மீட்டே தீருவது என்று உறுதி ஏற்று அதற்காக போராடுகிறார்கள்.

உலக மக்களின் அடிப்படை உரிமைகளின் காவலர்களாகிய நீங்கள்— சரியானதை சிந்திக்கும் ஆற்றல் பெற்ற நீங்கள்—மற்ற நாடுகளின் பிரச்சினைகளில் தலையிடுவதற்கு முன்னர் தனது நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்கும்படி திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவுக்கு ஆலோசனை கூறுவீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்!

"நாங்கள் வேண்டுவது நீதியும் நியாயமுமே!

## ஈழத் தமிழர் நிலை..

—1-ம் பக்கத் தொடர்

கயானா ஜனதிபதி மாசியாசும் தங்கள் தங்கள் நாடுகளில் பயங்கரவாத ஆட்சி நடத்திவருவதாக இக்குழுவுக்கு சாட்சியம் கிடைத்திருக்கிறது. அடுத்து இலங்கையில் தமிழர்கள் பாரபட்சத்துக்கு உட்படுத்தப்படுவதுபோல பொலிவியாவில் 'ட்றிம்' இனத்தவர்களும் நடத்தப்படுகிறார்கள் என்பதற்கும் சாட்சியம் கிடைத்துளது. உலகில் வேறு எந்த நாட்டிலும் வி— மாலாவியில் தான் மிக அதிகமானோர் விசாரணையின்றி சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

"இந்த மனித உரிமைக் குழு பிரத்தியேகமாக கூடிதான் ஆராயப்போகும் ஒவ்வொரு நாட்டின் நிலையையும் தனித்தனியாக ஆராயும். அதே சமயம் ஐ. நா. மரபுப்படி இந்த நாடுகளின் பெயர்கள் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கும்.

"இதன் பின்னர், மனித உரிமைக்குழு, தனது ஆராய்வின் அடிப்படையில், தவறுகளைத் திருத்தும்படி அந்தந்த நாடுகளின் அரசுகளுக்கு கடிதம் எழுதும். தம் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்களுக்கு பதிலளித்து மனித உரிமைக் குழுவுக்கு அந்தந்த நாடுகளின் அரசுகள் பதிலளிக்கவும் சந்தர்ப்பம் அளிக்கப்படும். அரசுகளின் பதில் வருமட்டும், மனித உரிமைக்குழு அவற்றின் மீதான வழக்குகளை ஆராயத் தொடங்காது.

"புகாரைக் காலம் கடந்த தாக்குவதற்காக அரசுகள் பதிலனுப்புவதை வேண்டுமென்றே தாமதிக்கும், ஒரு தந்திரத்தைக் கையாளக் கூடுமென்று இந்த முறைக்கு எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டு வருகிறது."

## சிங்கள முஸ்லிம்..

—1-ம் பக்கத் தொடர்

யென்று கூறப்படுகிறது. இந்த அசம்பாவிதத்தின் போது தாக்கப்பட்ட இ. போ. ச. பஸ் சாரதியும், நடத்துனரும் சிங்களவர்கள் என்றும் அவர்களைத் தாக்கியவர் முஸ்லிம் வாலிபர் ஒருவர் என்றும் கூறப்படுகிறது.

இதையடுத்து, இந்தப் பிரச்சினையை ஒரு சிங்கள— முஸ்லிம பிரச்சினையாக்கி, இதையே சாட்டாகக் கொண்டு காரணமின்றி அப்பாவி முஸ்லிம்களை இ. போ. ச. ஊழியாகளான சிங்களவர்கள் கண்டகண்ட இடங்களில் தாக்கத் தொடங்கினார்களாம். அளுத்கமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இனக்கலவர நிலை அங்கு தோன்றுவதற்கு கிஞ்சிற்றும் இடமளிக்காமல மிகவும் கடுமையாக இருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

இதையடுத்தே குறித்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை இடமாற்றம் செய்யக் கோரி இ. போ. ச. ஊழியர்கள் - பெரும்பாலும் சிங்கள ஊழியர்கள்—வேலை நிறுத்தத்தில் இறங்கியதாகச் சொல்லப்படுகிறது.

இது தொடர்பாக காலியிலும் சிங்கள — முஸ்லிம் அசம்பாவிதங்கள் சில இடம் பெற்றனவாம்.

## ரூபா நோட்டுக்கள் செல்லுபடியாகும்

பேனாவினால் எழுதப்பட்ட, அல்லது கீறப்பட்ட அல்லது எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட ரூபா நோட்டுக்களும் செல்லுபடியாகும் என்று மத்தியவங்கி அறிவித்துள்ளது. யாழ்ப்பாணத்தில் தமிழ்ஈழ விடுதலை முழக்கங்கள் பேனாவினால் எழுதப்பட்ட பல ரூபா நோட்டுக்கள் புழக்கத்திலிருப்பது தெரிந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஸிஸத்தின் மறுவடிவமே சிங்கள சோஷலிசம்!

# 'இட்லரிஸ'த்தின் மறுபதிப்பே சிங்களத் தேசியம்!

**அரசியல் வாதிகளில் இரண்டு வகையானவர்கள் இருக்கிறார்கள். இவர்களில் முதல் வகையைச் சேர்ந்தவர்கள் பணி விரும்பிகளான அரசியல் வாதிகள். இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்கள் பதவி விரும்பிகளான அரசியல் வாதிகள்.**

**பணி விரும்பும் அரசியல் வாதிகள் அதிகாரத்துக்கு ஆசைப்படாதவர்கள். மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதுதான் அவர்களது முதல் நோக்கம். அதிகார ஆசை இல்லாதவர்கள் ஆகையால் அவர்களுடைய வழி எப்போதும் நேர்வழியாகவே இருக்கும்.**

**பதவி விரும்பும் அரசியல் வாதிகள் அதிகார ஆசை நிறைந்தவர்கள். இதனால் இவர்களுடைய வழி எப்போதும் குறுக்குவழியாகவே இருக்கும். தேவையான அதிகாரம் எல்லாம் இவர்களின் கைகளுக்கு வந்தாலும் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்காமல் நீட்டிப்பதோடு மேலும் புதிய பிரச்சினைகளை இவர்கள் உருவாக்கிக்கொண்டே இருப்பார்கள். பிரச்சினைகள் தாம் இவர்களுடைய மூலதனம். இந்த மூலதனம் இல்லாமல் இவர்களுடைய அரசியல் வியாபாரம் நடக்காது!**

ஃபாஸிஸம் (Facism) என்பது பதவி விரும்பும் அரசியல் வாதிகள் அதிகாரத்தை எளிதாகக் கைப்பற்றிக் கொள்வதற்கு (கைப்பற்றிய அதிகாரத்தை தொடர்ந்து தம்கைகளில் வைத்துக் கொள்வதற்கு) கையாளும் குறுக்குவழி.

இயல்பாகவே மனிதனுள் மண்டிக்கிடக்கும் தன்னலத்தைத் தூண்டி தன்னல வெறியையும், 'தான்' என்ற ஆணவத்தையும் உண்டாக்குவதுதான் பாஸிஸத்தின் தலையாய பணியாகும்! இதன் விளைவுகளே மொழி வெறி, மத வெறி, பிரதேச வெறி, இன வெறி, ஆக்கிரமிப்பு, ஏகாதிபத்தியம் முதலியவை. பதவி விரும்பிகளான இந்த அரசியல்வாதிகளின் அதிகாரப் பசிக்கு போதுமான 'தீனி'யை இவைகளால்தான் போட முடியும்!! இதனால்தான், மனித குலத்தின் பொதுவான பிரச்சினைகளை எவ்வகை வெறிக்கும் இடமளிக்காமல் தீர்க்கவல்ல 'கம்யூனிஸம்' போன்ற அதி உன்னதமான அரசியல் சித்தாந்தங்களை நாடாமல், அவற்றின் போர்வையில், பாஸிஸத்தை வளர்க்கிறார்கள் பயங்கர அரசியல் வாதிகள்.

பாஸிஸத்தை ஒரே சொல்லில் விளங்கப்படுத்துவதானால் அதனை 'முதலாளித்துவ சர்வாதிகாரம்' என்று கூறலாம். ஓர் இனத்தின் மட்டற்ற சாவாதிகாரம் ஏனைய இனங்களை வர்க்க வேறுபாடற்ற முறையில் சுரண்டுவதற்கு இடமளிக்கும் வகையில் அமைவதுதான் பாஸிஸ ஆட்சியாகும்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கிச் சீரழியும் நாட்டில்தான் பாஸிஸ ஆட்சி தலையெடுக்கிறது. இது வரலாறு காட்டும் உண்மை.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கையில் அரசியல் அதிகாரப் போட்டிகள் ஆரம்பித்த காலகட்டமான 1956ம் ஆண்டில்தான் முதன் முதலாக பாஸிஸம் தலையெடுத்தது!

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் ஒரே நோக்கோடு பண்டாரநாயக்கா எழுப்பிய 'தனிச் சிங்களம்' என்ற இனவெறிக் கொள்கை, அதே நோக்கோடு யூதர்களுக்கெதிராக ஹிட்லரால் வகுக்கப்பட்ட இன ஒழிப்புக் கொள்கையான பாஸிஸத்துக்கு (அல்லது தேசிய சோஷலிஸத்துக்கு) எந்த வகையிலும் குறைவுடையதோ அல்லது வேறுபட்டதோ அல்ல!

வர்க்க வேறுபாட்டையே ஒழிக்கும் சோஷலிஸத்தை உச்சரித்துக்கொண்டு யூத இனத்தை ஒழித்து ஜெர்மனிய ஆரிய இனத்தைப் பெருக்கவும்.

தனியுடைமையை நிர்மூலமாக்கும் சோஷலிசத்தைக் கூறிக்கொண்டே யூதர்களின்

**ஆ. சேயோன்**

நிலங்களைப் பறித்து ஜெர்மனிய ஆரியருக்குக் கொடுத்து அவர்களை பெரும் நிலப்பிரபுக்களாகவும்,—

மதத்தை 'அபின்' என்று கூறுகின்ற சோஷலிசத்தை தமது கொள்கை என்று சொல்லிக்கொண்டே மதத்தையே அரசியல் சட்டமாக்கவும் முயன்ற ஹிட்லரின் தேசிய சோஷலிசமே இன்றைய ஸ்ரீலங்காவின் சிங்கள சோஷலிசமாக மறு அவதாரம் எடுத்துள்ளது.

இரண்டாவது உலகப் போருடன் ஜெர்மனியிலிருந்த ஹிட்லரின் பாஸிஸக் கூடாரம் நொறுக்கிச் சிதறடிக்கப்பட்டாலும் அதே அமைப்புள்ள பாஸிஸ கூடாரங்களை இலங்கை (ஸ்ரீலங்கா) போன்ற நாடுகளிலுள்ள பெரும்பான்மை இனத்தைச்சேர்ந்த அதிகார வர்க்கங்கள் அமைத்துக் கொண்டு அவற்றின் கீழிருந்து ஆட்சிபுரிந்து வருகின்றன.

இல்லையேல்—

பெரும்பான்மை இனம் என்ற காரணத்தால் மட்டற்ற அதிகாரங்களை தங்கள் கைகளில் குவித்துவைத்துக் கொண்டிருக்கும் சிங்கள மக்கள், தங்கள் சமுதாயத்தில், குறிப்பிட்ட ஒரு குடும்பத்தின் தலைமையை ஏற்று, தேசிய ஐக்கியத்தின் வடிவமே அத்தலைமைதான் என்று கூக்குரலிடத் தேவையில்லை. குறிப்பிட்ட ஒருவருடத்தில்தான் தலைமை தாங்கும் ஆற்றலும், தகுதியும் அமைந்து கிடக்கின்றன என்ற எந்த சோஷலிஸத்திலும் தவிர வேறு எந்த அரசியல் சித்தாந்தத்திலும் இல்லை!!

இவ்வாறாக, தலைவனை பரமபிதா என்று போற்றுகின்ற பாஸிஸ கோட்பாடு இந்த நாட்டில் நன்றாக வேரூன்றி வருவதை நாளாந்த அரசியல் போக்குகள் தெளிவாகக் காட்டுகின்றன.

இதைவிட—

அரசியல் சட்டத்தில், சிறுபான்மை இனத்தின் மதங்களை ஒதுக்கிவிட்டு, பெரும்பான்மை இனத்தின் மதம் என்ற காரணத்தால், பௌத்தமே அரசாங்க மதமாக்கப்பட்டு பேணிப் பாதுகாக்கப்படுகிறது;

பௌத்தமத கோட்பாட்டைப் பரப்பவந்த இனத்தினர் என்று தம்முதுகில் தாமே தட்டிக்கொண்டு பெருமைப்படுகிறவர்களான சிங்கள மக்களின் விருப்பு வெறுப்புகளுக்கு மட்டுமே ஆட்சியில் இடமளிக்கப்படுகிறது. இதனால் சிங்கள இனமே உயர் இனமாக்கப்படுகிறது;

தமிழர்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்த ஆக்கிரமிப்பாளர்கள் என்று பொய்ப்பிரசாரம் செய்யப்பட்டு, சிங்கள அரசாங்கத்தின் துணையுடன் சிங்களவர்களால், தமிழர்களின் பாரம்பரிய ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்கள் பலவந்தமாகப் பறித்து எடுக்கப்படுகின்றன. இதன்மூலம் சிங்கள மக்கள் தங்கள் பிரதேசத்தை விரிவாக்கிக்கொள்கிறார்கள். இவ்வாறு, கலப்பற்ற பாஸிஸ நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுதான் தம்மை சோஷலிசவாதிகள் என்று கூச்சமோ, தயக்கமோ இல்லாமல் அழைத்துக்கொள்கிறார்கள் ஆதிக்கபுரியினர்!

சோஷலிஸத்தின் பெயரால் தேசியமயம் என்ற போலித்திட்டத்தைப் புகுத்தி, யூதர்களின் நிலங்கள், வீடுகள், கல்விக்கூடங்கள், நிறுவனங்கள், பெரிய கட்டடங்கள் யாவற்றையுமே சுவீகரித்து, பின்னர் அவற்றை ஜெர்மனியர்களுக்குக் கொடுத்துவிட்டு, யூத மக்களை கதியற்றவர்களாக்கிய ஹிட்லரின் சோஷலிசத்தைப் போல, தமிழர்களின் உடைமைகளை தேசியமயத்தின் பெயரால் பறித்து எடுத்துக் கொண்டு, படிப்படியாக அவற்றை சிங்கள மயமாக்குகிறார்கள் சிங்கள சோஷலிச வாதிகள்.

'சிங்களமே தேசியம்; ஆகவே தேசிய மயம் என்றால் சிங்களமயம் என்றுதான் பொருள்' என்று தயங்காமல் கூறுகிறார்கள் சிங்கள சோஷலிசவாதிகள்!

இப்படிப்பட்ட இந்த சோஷலிசவாதிகள் தங்கள் ஆட்சியைப் பற்றியும் அரசாங்கத்தைப் பற்றியும் பேசும்போது உபயோகிக்கும் வார்த்தைகள் பாஸிஸத்தை அப்படியே உள்ளவாறு வழிமொழிவதாகவே இருக்கிறது!!

இதோ, பாஸிஸத்தின் 'படைப்புக் கடவுளான ஜியோவர்ன்னி ஜென்டைல் (Giovarini Gentile) என்பவர் கூறுகிறார்:

"அரசாங்கமே ஆத்மீக—தார்மீக மதிப்புகளைக் காப்பதற்கும், புறத்திலிருந்து வரவல்ல அபாயங்களை எதிர்த்து வெற்றிபெறுவதற்கும் உத்தரவாதமாக இருக்க வல்லது. பல நூற்றாண்டுகளாக வளர்ந்து வரும் (பெரும்பான்மையோரின்) மொழி—கலாசாரம் ஆகியவற்றைக் காத்துநிற்கிறது; இவற்றின் பெருமைகளைப் பிரச்சாரம் செய்கிறது!! அரசாங்கம் தனது இந்த உன்னத நோக்கங்களை இழந்துவிடுமானால் நாட்டில் பிரிவினைச் சக்திகளின் கை ஓங்கிவிடும். அதன் விளைவால் தேசம் சின்னாபின்னமாய்ச் சிதறுண்டு. முடிவில் நாசமுறும்!!"

## தமிழீழத்தின் எல்லை..

—7-ம் பக்கத் தொடர்

மாறாக சுதந்திரம், சுபீட்சம், சமத்துவம், என்னும் நம்பிக்கை ஒளிவிளக்குகளை காணும்வரை அது ஓயாது, ஒழியாது. எனவே மதிப்பிற்குரிய என் அருமை நண்பர்களே, நீங்கள் எப்படியிருந்தாலும், எங்கேயிருந்தாலும், என்றைக்கும் ஒரு நாள் எம்மோடு, எம்பாதையுடன் இணைந்துதான் ஆகவேண்டும். எனவே தயவு செய்து, காலம் தாழ்த்தாமல், கடமையின் சிறப்பையுணர்ந்து, எம்முடன் வாருங்கள் என்ற அழைப்பினை நான் விடுக்கிறேன்.

தமிழ் தேசிய இனம், தன் இழந்துவிட்ட இறைமையை மீள்வித்து, புனரமைப்பு செய்து, தமிழ் ஈழம் ஒன்றை காண்பது அவர்கள் பிறப்புரிமை. எனவே எமது பிறப்புரிமையை நாங்கள் பூர்த்தியாக்குவது என்றும் குற்றமாகாது. நாம் குற்றமற்றவர்கள் என்பதை இறுதியாக கூறி, நல்ல தீர்ப்பை தாருங்கள் என்று வேண்டி விரும்பி இத்துடன் என் வாதத்தினை முடிக்கின்றேன்.

(அடுத்த இதழில் முடியும்)

## மூன்றரை ஆண்டு

—3-ம் பக்கத் தொடர்

கிய திரு. சத்தியசீலன், நீர்கொழும்பு சிறைக்கு மாற்றப்பட்டார். 3ம் நாளிரவு அவரது நிலைமை கவலைக்கிடமாகி சிறைச்சாலை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப் பட்டார். அதிலிருந்து அவருக்கு பலவந்தமாக உணவூட்டப்பட்டதாகக் சொல்லப்பட்டது.

ஆகஸ்ட் 14வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த இளைஞர்கள் நீராகாரம் மட்டுமே எடுத்து வந்தனர். தங்கள் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படாவிடின் மீண்டும் தாம் சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பிக்கப் போவதாக அவர்கள் அரசுக்கு எச்சரித்துள்ளனர்.

ஆகஸ்ட் கடைசியில் பாராளுமன்றத்தில் பிரதமர் திருமதி பண்டாரநாயகா பேசுகையில், இந்த இளைஞர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை ஏதுமில்லையென்றும், பாதுகாப்பு காரணங்களுக்காகவே தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் ஒப்புக்கொண்டார்.





பாவியுங்கள்
பளிச்சிடும் வெண்மைக்கு
**ரோயல் நீலம்**
தயாரிப்பாளர்கள்:
சிவா இன்டஸ்ரீஸ்
112 1/3, 4ம் குறுக்குத்தெரு,
கொழும்பு-11.
விநியோகஸ்தர்கள்:
சேகர் அன் பிறதர்ஸ்,
ஆதம்மலி கட்டிடம்,
20, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.
தொலைபேசி: 35049

**"மில்க்வைற் செய்தி. இதழ். 10'**
**(கந்த சஷ்டி மலர்)**

**மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகள் ஏதாவது இரண்டு அனுப்பி மேற்படி இதழ் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.**

விளம்பரப்பகுதி:

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,**
**த. பெ. எண் 77 யாழ்ப்பாணம்.**

# தமிழ்ஈழத்தின் எல்லைகள் எவை?

## இப்படிக் கேட்டவர்களை வாயடைக்கவைத்தார் சிவதாசன்!

### யாழ் வளாக வழக்குரைமன்றில் மோதல்!

சென்றவாரத் தொடர்

திரு நாவேந்தன் தன் வாதத்தைத்தொடங்கிய போது 1960ம் ஆண்டு தேர்தலில் திரு. வி. தர்மலிங்கம் அவர்களுக்குத்தான் தேர்தல் விஞ்ஞாபனம் எழுதிக் கொடுத்த திருப்பணியைச் செய்ததாகவும், திரு. தா. திருநாவுக்கரசு போன்றவர்களைக் கடந்த நான்கு ஆண்டுகளாக நேரிலே காணமுடியாத (கொள்கை மாற்றத்தால் போலும்) நிலையிலிருந்ததாகவும் குறிப்பிட்டார். (திரு. வி. தர்மலிங்கம், திரு. தா. திருநாவுக்கரசு, திரு. மு. ஆலாலசுந்தரம் ஆகியோர் பார்வையாளர் வரிசையில் அமர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது)

இவ்வேளை நீதிபதி குறுக்கிட்டார்.

நீதிபதி: சட்டத்தரணி தமது சுயபுராணம் பாடப் போகிறாரா? அல்லது வாதம் நிகழ்த்தப்போகின்றாரா?

நாவே: (தொடர்ந்து பேசும்போது): பிரிவினையின் மூலம் இந்தியா பாகிஸ்தானுகப் பிரிந்து, பாகிஸ்தான பங்களாதேசாகப்பிரிந்ததை நினைவூட்டி தமிழ் ஈழமும் அவ்வாறே பல பகுதுகளாகச் சிதறுண்டு போகலாம் எனக் குறிப்பிட்டார். பிரிவினை என்பது வெறும் வாக்குச் சேகரிக்கும் கோசமே தவிர வேறொன்றுமில்லை. டண்டைத்தமிழ் ஈழவரலாற்றுககு ஆதாரம் ஏதும் கிடையாது. காவியத்தை, கற்பனையில் கண்டவற்றை வைத்துக்கொண்டு பிரிவினை கோரமுடியாது. ஸ்ராலினதும், அலனினதும் நூல்களில் உள்ள ஒன்றிரண்டு பக்கங்களைப் புரட்டி அதில் சில பகுதிகளைப் பிரித்தெடுத்துச் சான்று காண்பிப்பதை ஏற்கமுடியாது. (இவ்வேளை பிரதிவாதி தரப்பிலிருந்து திரு. நா. கருணனந்த சிவம் குறுக்கிடுகிறார்)

கருணு: கனம் நீதிபதி அவர்களே! இவரது கூற்றை நான் ஆடசேபிக்கின்றேன். இங்கே முழுமையான நூல் வடிவில் நான் சான்றுகளைச் சமர்ப்பித்துள்ளேன். அப்படியிருக்கப் பகுதிகளைப் பிரித்தெடுத்துக் காட்டியதாக இவர் கூறுவது தவருனதாகும.

நாவேந்தன்:(தொடர்ந்து) தமிழினம் ஒருதேசிய இனம் அன்று, தமிழ் ஈழப்பிரிவினை வாதிகள் கொழும்பில் இருக்கின்ற தமிழர்களையும் என்ன செய்யப்போகிறார்கள்? (இவ்வேளை திரு. வி. தர்மலிங்கத்தைப்பார்த்து திரு. நாவேந்தன் ஒரு குறிப்பைக்கூற திரு. வி. தர்மதலிங்கம் அவர்கள் தம் ஆட்சேபனையை நீதிபதியிடம் ஒளி தெரிவித்தார் )

நீதி: சபையிலுள்ளோரைப் பற்றிச் சட்டத்தரணி ஏதும் குறிப்பிடக்கூடாது.

நாவேந்தன்: இங்கே ஒரு புரட்சி நடக்கிறது. இந்தப் புரட்சியின் மூலம் ஒரு தமிழ் ஈழம் மலர இருக்கின்றது என்கிருர்கள். தனிநபர்களைக்கொலைசெய்து பயங்கரவாதம் நடந்துகிருர்கள். இது புரட்சியல்ல. இதன் மூலம் தமிழ் ஈழம் மலர முடியாது.

பிரதிவாதி சட்டத்தரணி: திரு.நா. கருணு:நீதிபதிஅவர்களே! வாதிதரப்புச் சட்டத்தரணி அவர்கள் யாரோ ஒரு தனிநபரின் கொலையை —அதுவும் நீதிமன்றத்திற்கு வழக்காக வரவிருக்கும் கொலையைக் குறிப்பிட்டு அதனைப் பிரிவினை வாதிகளோடு தொடர்பு படுத்திக் கூறுவதை—வெறும் சந்தேக அடிப்படையில் கூறுவதை நான் ஆட்சேபிக்கின்றேன்.

நீதி: சந்தேகங்களை வாதங்களாக வைப்பதை இந்நீதிமன்றம் ஏற்கமுடியாது.

நாவேந்: இல்லை ஐயா! நான் பயங்கரவாதத்திற்கும், புரட்சிக்கும் இடையேயான வேறுபாட்டைக் கூறவே இதைக் குறிப்பிட்டேன். இந்த நாட்டிலே மொழிப்பிரச்சினை தீர்க்கப்படுவதால் மட்டும் தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட முடியாது. நாமும் பிரிவினைதான் கோருகிறோம். ஏகாதிபத்தியத்திற்கு எதிரான, முதலாளித்துவத்திற்கெதிரான பிரிவினை. [சபையில் சலசலப்பு:— "நாவேந்தன் எதிரிதரப்பினருக்கு ஆதரவாகப் பேசுகிருரோ?"]

"நாம் எழுதி முன்பு குப்பைக் கூடையில் போட்டுவிட்ட சில நூல்களை இங்கே ஆதாரமாக எதிரி தரப்புச் சட்டத்தரணி சுட்டிக்காட்டியதை நாம் ஏற்கமுடியாது. இந்த நாட்டில் புரட்சிகரக் கம்யூனிச வழியிலேயே நாம் பிரச்சினையைத் தீர்க்கமுடியும். பிரிவினையால் அல்ல. எனக்கூறிமுடித்தார்.

நீதி: இனி, திரு. சிவதாசன் தமது வாதத்தை நிகழ்ந்துவார்.

சிவதாசன:- நமக்கு "தரப்பட்டதலைப்பே சற்றும் பொருத்தமற்றதாக உள்ளது என்ற ஆட்சேபனையை நான் கிளப்புகின்றேன். கி. பி. 1619ல் போர்த்துகேயரிடம் இழந்த இறைமையை, ஏறத்தாழ மூன்றரை நூற்ருண்டு காலமாக, முறையே போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், சிங்களவர் ஆகியோரிடம் இறைமையை இழந்த நிலையில் வாழும் அவலத்தை போக்கி, இழந்த இறைமையை மீள்வித்து புனரமைப்பு செய்வது ஒருநாளும் பிரிவினையாகாது. எனவே நாம் பிரிவினை கோரவில்லை, தவிர பிரிவினை வாதிகளுமல்ல. இழந்த எமது இறைமையை, உரிமையை மீண்டும் பெற்றுக்கொள்ள விழைவது எந்தவகையிலும் குற்றமாகாது என்பது அறிவிற் சான்ற, ஆற்றல் மிகு மேதைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். ஆனல் இவை நமது வாதிதரப்பு சட்டத்தரணிகட்கு தெரியாதது விந்தை போலும்.

எனது மதிப்புக்குரிய வாதிதரப்பு சட்டத்தரணிகளான புதுமை லோலனும், நாவேந்தனும்சில தவருன, அனுவசியமான சந்தேகங்களை, ஊகங்களை எடுத்துரைத்தார்கள். அதற்கு பதில் சொல்ல வேண்டிய கடப்பாடு எனக்குள்ளமையால் நான் சிலவற்றுக்கு பதில் சொல்ல விழைகின்றேன். திருமலை துறைமுகம், ஏகாதிபத்திய வாதிகளிடமிருந்து மீட்கப்பட்டபோது அதனை எதிர்த்தவர்கள், இவர்கள் வெறும் ஏகாதிபத்திய ஏவலாளிகள் என்ற தவருன கருத்தை முன்வைத்தார் மதிப்பிற்குரிய என் நண்பர் புதுமை லோலன் அவர்கள், ஆம் எதிர்த்தோம், ஒத்துக்கொள்கிறோம். ஆனல் எதற்காக எதிர்த்தோம் என்பதில் தான் விளக்கம் தரும். திருமலை துறைமுகம் தேசியமயமானபோது, எமது தாயகத்தில் அமைந்த தளமென்பதாலும், அங்கே பணியாற்றிக் கொண்டிருந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் தொழிலாளர்களின் எதிர்காலம் பற்றி எதுவும் தெரிவிக்காமையாலும், எம்மை கலந்தாலோசிக்காதபடியாலும், நாம் மாட்சிமை தங்கிய மகாராணியார் அவர்கட்கு தந்தி கொடுத்தோம் அவ்வளவுதான் நாம் ஏகாதிபத்திய ஏவலாளிகள் என்றால், தேசியமயக் கொள்கைகளின் விரோதியென்றால், கட்டுநாயக்கா விமானதளப் பிரச்சினையில் நாம் எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லையே அதற்கு என்ன பதில் சொல்லுகிறீர்கள்?

விடுதலை வேட்கை கொண்ட தமிழினம், விடுதலை கோரும் உரிமை கொண்டதா என்பதுபற்றிய கருத்துக்கு பதில் சொல்லுவது அவசியம் என்று நான் கருதுவதால் ஆதாரபூர்வமாக, வரலாற்று அடிப்படையிலும், உலகம் போற்றிய மாமேதைகளின் கருத்தின் அடிப்படையிலும், ஈழத்தில் வாழும் 35 இலட்சம் தமிழ் பேசும் மக்கள் ஒரு தனித் தேசிய இனமென்பதை நான் சுட்டிக்காட்ட விழைகின்றேன். கி. பி. 1619 ஆண்டு போர்த்துகேயனிடம் இறைமையை இழக்கும் வரையில், பூரண இறைமையுடன், தன் சொந்த தமிழ் மன்னர்களின் ஆளுகையின் கீழ், தனித்துவமான ஆட்சியின்கீழ், கோலோடு, கொடியோடு, சீரோடும், சிறப்போடும் வாழ்ந்தது. செந்தமிழ் குலம். இறைமையை அந்நியன் போர்த்துக்கேயனிடம் பறிகொடுத்த பின்பும்கூட கி. பி. 1833 வரையில் தமிழ், சிங்கள இராச்சியங்கள் தனித்தே இருந்தன என்பதை வரலாறுபடித்த பெருமக்கள் மறக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன். மதிப்புக்குரிய நீதிபதியவர்களும், வாதி தரப்பு சட்டத்தரணிகளும், உணரும் வகையில் சரித்திரங்களின் சான்றுகளின் துணையோடு என் வாதத்தை முன்வைக்கின்றேன்.

**சான்றுகள்**

(1)யாழ்ப்பாணஇராச்சியம் மேற்கே சிலாபம் வரையில், கிழக்கே வன்னியுடன் இணைந்த மன்னரிலிருந்து திருமலைவரை பரந்து விரிகியது. (Conquest of Ceylon by Queyroz—Page 57)

(2) தீவின் வடபாகமும், மேற்கே சிலாபம் தொட்டு கிழக்கே மட்டுநகர் வரையும், பிரதான, பெரும்பான்மை குடிகள் தமிழர்களே. (See—Ceylon—an account of the Island by Sir James Emersan Tennent volume I, Page 414, 415, 416)

(3) கி. பி. 1619 முன்பாக யாழ். இராச்சியம் தனது சொந்த அரசர்களின் ஆளுகையின் கீழ் சிறந்தோங்கியது. (See Scilao by Robeiro-Page 90, 91)

(4) கி. பி. 1613ல் யாழ். இராச்சிய எல்லை திருமலை வரை சிறந்து ஓங்கியது. கொன்சான்டிகா என்னும் போர்த்துக்கேய தளபதி திருமலையில் கோட்டை கட்ட யாழ். மன்னனிடமிருந்து அதிகாரம் பெற வேண்டியிருந்தது. (See The annual letters of 1613 published in "Ceylon Antiquary" volume II, Part I, Page-10)

(5) கண்டி இராச்சிய எல்லைக்குள் வணிக முறையில் போர்த்துக்கேயரை அனுமதிக்க அல்லது அவர்கட்கு உதவ யாழ். இராச்சியம் முன்வந்த காலகட்டம் வரைக்கும், யாழ். இராச்சியத்தை கைப்பற்ற போர்த்துக்கேயர் பெரும் சிரமப்பட்டார்கள் என்று தெரிகின்றது. (See Portugese Rule by C. R. de Silva - Page 43)

(6) 1796ம் ஆண்டு வெளியிடப்பட்ட கிளகோர்ன் அறிக்கை — இலங்கையில் இரு நாடுகள் இருந்ததை எடுத்துக்கூறுகிறது.

எல்லைகளை பற்றி சந்தேகம் தெரிவித்து, கதிர்காமத்துக்கு'விசா'வேண்டும் என்று கிண்டல் பேசிய அறிவில் மிகுந்த நண்பர் புதுமை லோலனும், இலக்கியத்தில் காணப்படும் கற்பனை கலந்த சரித்திரச் சான்றுகள் என்றும் ஆதாரபூர்வமாகாது என்று மேதாவித்தனம் பேசிய நண்பர் நாவேந்தனும், தயவு செய்து நான் கூறிய நூல்களை படித்துப் பார்த்தீர்களேயானல், அசைக்கமுடியாத ஆதாரங்களைக்கொண்டு தாம், நம் வாலாற்று அடிப்படையில் தமிழினம் தனித் தேசிய இனம் என்பதை பூரணமாக உணர்ந்து கொள்வீர்கள்.

கி. பி. 1619க்கு பின்னும் கி. பி. 1833 கோல்புறூக் சீர்திருத்த ஆணைக்குழுவின் சிபாரிசின் அடிப்படையில், நிர்வாக வசதிக்காக, ஒன்று படுத்தப்பட்டுவிட்டது தமிழ், சிங்கள இராச்சியங்கள். எனவே ஏறத்தாழ ஒன்றரை நூற்ருண்டுகள் தாம் எமது தனித்துவம் பறிக்கப்பட்ட நிலையில், தாயகத்தின் எல்லைகள் குறைக்கப்பட்ட நிலையில், பலவந்தமாக சிங்கள தேசிய இனத்துடன் வாழவேண்டி கட்டாயப் படுத்தப்பட்டுள்ளோம். எனவேதான் ஆதாரபூர்வமாக நாம் தனித் தேசிய இனமென்று வலியுறுத்திக் கொள்கிறோம்.



திரு. க. சிவதாசன்

சோவியத் ஒன்றியத்தில் 115 தேசிய இனங்கள், சுபீட்சமாக, சோசலிச பாதையில் வாழ்கின்றன என்று பெருமிதப்பட்டு, அந்த வாழ்வு இங்கே வருமென்றுவாதிட்டார் நாவேந்தன் அவர்கள். 7-11-1917 நடந்த வரலாற்று புகழ் கொண்ட புரட்சியில் சோவியத்து ஒன்றியம் மலர்ந்த வேளை 16-11-1917 வெளியிடப்பட்ட மக்கள் உரிமைப் பிரகடனத்தில் எதை குறிப்பிட்டார்கள். அதனை எதற்காகவோ என் அருமை நண்பர் சொல்ல மறந்துவிட்டார்.

(1) ரஷியாவில் வாழும் அனைத்து மக்களுக்கும் தேசிய இனங்களுக்கும் சமத்துவமும், இறைமையும்.

(2) சகல இனங்களுக்கும் பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை.

இந்த நிலையை இங்குள்ள பொதுவுடமை பெருமக்கள் மறந்தாரோ? புரட்சியின் காலை 5 மாநிலங்கள் பின்லாந்து, போலாந்து, லித்துவேனியா, போன்றவை ஒன்றியத்தைவிட்டு விலகிய போதும், நோர்வே நாட்டிலிருந்து சுவீடன் பிரிந்து சென்றபோதும், மாமேதை லெனினே. மார்க்சீய பிதாமார்கள் மார்க்ஸ், ஏஞ்கெல்ஸ் அவர்களோ எதிர்க்கவில்லையே. மாருக அவற்றுக்கு ஆதரவு காட்டி, உலக பாட்டாளி மக்களிடையே பிரச்சாரம் செய்தார்களே. எனவே மாமேதை லெனினை, மார்க்ஸ், ஏஞ்செல்சை. நீங்கள் குற்றக் கூண்டில் நிறுத்த விரைகின்றீரா? என்று கேட்க விரும்புகின்றேன்.

எந்த தத்துவத்தை ஏற்றுக்கொண்டார்களோ, எந்த தத்துவம் பூத்துக் குலுங்கும் பொதுவுடமை பூங்காவான சோவியத் ஒன்றியத்தை போற்றுகிருர்களோ, எவர்களை தம் பிதாமகர்கள்என்று முழங்குகிருர்களோ, அந்த கொள்கைகளை, தத்துவங்களை, அடிப்படைக் கருத்துக்களை, குழிதோண்டிபுதைத்துவிட்டு, வாய்ச்சவடால் சோசலிசம் பேசுகின்ற என் மதிப்பிற்குரிய வாதிதரப்பு சட்டத்தரணிகளை குற்றக் கூண்டில் நிறுத்த வேண்டும் என்று மாட்சிமை தங்கிய நீதிபதியவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

தமிழினத்தின் விடுதலை வேட்கையும், தாகமும் என்றும் தணிந்துவிடாது.

—6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

## நிழல் நாடகம்

லூட்ஸ் — ராணியக்கா இப்ப நம்மட ஊரில நடக்கிற நடப்புகளைப் பார்த்தா இன்னுங் கொஞ்ச நாளில நாங்களெல்லாம் குடியெழும்பவேணும் போலதான் இருக்கு.

ராணி— ஏன்?

லூட்ஸ்— ஏனு? நல்லாயிருக்கு உங்கட கேள்வி. இப்படி எங்கட ஊரில என்ன நடக்குதென்று தெரியாத எங்களைப்போல ஆட்கள் இருக்கிறதாலதான் இன்றைக்கு இந்த நிலைமை நமக்கு வந்திருக்கு. இனியும் நாங்கள் தூங்கிக்கொண்டிருக்கக் கூடாது.

ராணி— நீ விஷயத்தை விளக்கமாகத்தான் சொல்லன்.

லூட்ஸ் — ஒரு காலத்தில தனித்தமிழர்களே வாழ்ந்து வந்த எங்கட மன்னார் மாவட்டம் இன்றைக்கு சிங்கள ஆதிக்கத்துக்கு உள்ளாகி சீரழியிற நிலைமையைத்தான் சொல்லுறன்.

ராணி — அட, அட நீ அந்தபேசாலை, தலை மன்னார் சம்பவங்களைப்பற்றிச் சொல்லுறியா...?

லூட்ஸ் — அதுமட்டுமா கொண்டச்சியில 600 சிங்கள குடும்பக் குடியேற்றத்திட்டம். இது போக இன்னும் எத்தனை விடயங்கள் நாம அறியாமல் நடந்துவருகிறதோ.

ராணி— என்ன செய்யிறது ஒட்டகத்துக்கு இடம் குடுத்தவனிட கதையாக நம்மட நிலை மாறிக்கொண்டு வருகுது.

லூட்ஸ்— மாறிக்கொண்டு வருகுது என்று வாளா இருக்க ஏலுமா? கொண்டச்சி முஸ்லிம் கிராமம் இன்னும் ஒரு வருடத்தில பௌத்த சிங்கள கிராமமாயிடும் எங்கட ஐ. தே. கட்சி எம். பி. ஏதும் இதுவரையில இதுக்கு நடவடிக்கை எடுத்தாரா?... அப்படி எடுக்க நினைச்சாலும் நடைமுறையில அவரால ஒன்றும் செய்ய ஏலாது ஏனென்றால் அடுத்த தேர்தலுக்கு அப்பிடிக் குடியேறுறவங்கட வாக்குகளையே எங்கட சிங்களக் கட்சிப் பிரதிநிதியான எம். பி. நம்பியிருக்கிறார்.

ராணி— அப்போ இதுக்குத் த. வி. கூட்டணி ஏதும் நடவடிக்கை எடுக்கிறது தானே.

லூட்ஸ்— கூட்டணி யென்றால் யாரு. நாங்கள் தானே! வீட்டத் திறந்து வச்சோம். நாய் நுழைஞ்சிட்டுது. இனி அடுத்தவங்களைக் கூப்பிட்டு நாயைக் கலையுங்கோ என்று சத்தம் போடாமல் நாங்களே அடிச்சுக் கலைக்கவேணும். அதுதான் முறை. மன்னாரைப் பொறுத்தவரையில் — ஒழுங்கான முறையில் த. வி. கூ. அமையாமல் போனதுதான் இந்த வினைக்கெல்லாம் காரணம்.

ராணி— என்னவாகத்தான் இருந்தாலும் பா[illegible] லூட்ஸ். எங்கட கூட்டணி எம்பிமாரும் அடிக்கடி இங்க வந்து எங்கடை ஆட்களுக்கு உணர்வும் உறுதியும் ஊட்ட வேணும்.

லூட்ஸ்— இதுவரையில் அப்பிடித்தான் நடந்திட்டுது அது அவங்க பிழை, என்றாலும் அவர்கள் இல்லாமலே நாங்க முயற்சி எடுக்காதது எங்க தவறும் கூட. இனி இப்படித் தவறுகள் நடக்க விடாமல்...நாம் பிறந்த நாட்டைக் காக்க முன்வருவோம்... மங்கையர்க்கரசி அக்கா சொன்ன மாதிரி ஆண்களுக்குத் துணையாக அவர்களை விடுதலைப் போருக்கு ஊக்குவிக்கிறது நம்ம கடமை.

—அற்லஸ்

## டிசம்பரில் பேரவை...

—1-ம் பக்கத் தொடர்

மார்ச் திங்களுக்குள் நடைபெறலாமென்றும் அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

தேர்தலை 1980 வரை ஒத்திவைக்கவேண்டுமென்ற கருத்தைவிட, தேர்தலை நடத்தி அதில் வெற்றிபெற வேண்டுமென்ற கருத்தே அரசாங்கக் கட்சிக்குள் இப்போது மேலோங்கியுள்ளதாம். டி. பி. சுபசிங்கா, பீட்டர்கெனமன், ஆர். எஸ் பெரேரா போன்ற அமைச்சர்களும், சரத்முத்தட்டுவேகம போன்ற அரசாங்க பா. உ. க்களும 1977ல் தேர்தலை நடத்தியேயாகவேண்டுமென்று பகிரங்கமாக கருத்து வெளியிட்டுள்ளனர். தேர்தலை நடத்தாது விட்டால் 'பிற்போக்கு' வாதிகளின்கைஓங்கிவிடுமென்பது இவர்களின் கருத்தாக இருக்கிறது. பிரதமர்நாடு திரும்பியதும் பொதுத் தேர்தல் எப்போது என்பதுபற்றிய சர்ச்சைக்கு முடிவு ஏற்பட்டுவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.


**செல்லமகால் 3வது வாரம்**

ரவிச்சந்திரன், ஜெயலலிதா. நடித்த

**அன்று கண்ட முகம்**

ரீகல் மட்டக்களப்பு

ராஜேஸ் கண்ணா நடித்த **டாக்** (ஈஸ்ட்மென் கலர்)

தாஜ்மஹால் (மாத்தளை) 3வது வாரம்

**நினைத்ததை முடிப்பவன்**

கிங்ஸ் பதுளை 2வது வாரம்

**அவள் ஒரு தொடர் கதை**

3வது வாரம்

**கெபிட்டி**

சிவகுமார், ஜெயசுதா, ஸ்ரீப்பிரியா, கமலஹாசன், தேங்காய் சீனிவாசன், அசோகன், மனோரமா, டி. கே. பகவதி, பண்டரிபாய், ஜயலக்ஷ்மி —நடித்த

**பட்டிக் காட்டு ராஜா** ஈஸ்மென் கலர்

கதை, வசனம், டைரக்‌ஷன்
கே. சண்முகம்

**கிங்ஸ்லி—லிடோ -4வதுவாரம்**
(கொழும்பு) (யாழ்நகர்)

சிவாஜி கணேசன், ஜெயலலிதா, மஞ்சுளா
மேஜர் சுந்தரராஜன் முத்துராமன்,
மற்றும் பலர் நடித்த

**அவன் தான் மனிதன்**

(ஈஸ்ட்மென் கலர்)

திரைக்கதை டைரக்‌ஷன் — A. C. திருலோகச்சந்தர் M. A.

**பிளாசா 9வது வாரம்**

சிவாஜி கே. ஆர். விஜயா
ஸ்ரீகாந்த், பிரமிளா, வி. கே. ராமசாமி,
— நடித்த —

**தங்கப் பதக்கம்**

(ஈஸ்மன் கலர்)

**கெப்பிட்டல்**

**பூம்புகார்**

எதிர்பாருங்கள்

தேவரின் **திருவருள்** ஈஸ்மன் கலர்


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1976-ம் வருடம் ஒக்டோபர் மாதம் 10ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org